
www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 13
மடல் : 10

தி.பி. 2030 : கன்னி
கி.பி. 1999 : அக்டோபர்

விலை ரூ.5.00




படிப்பகம்

www.padippakam.com

# நிறை - குறை

### பல கோணங்களில்...

அயர்லாந்து விடுதலைப்போராட்டத்தில் கொனொல்லி என்ற மாவீரனின் தியாகத்தை எஸ். வி. ராஜதுரை தெளிவுற விளக்கியுள்ளார். பல இன்னல்களுக்கு ஆளாகியும் அயர்லாந்து விடுதலைக்கு கொனொல்லி ஆற்றியுள்ள பங்கு மகத்தானது.

தேசிய இனப் போராட்டத்தைக் கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிதான் நடத்த வேண்டுமா? என்ற கட்டுரை பல கோணங்களில் சிந்திக்க வைக்கிறது. தென்னாப்பிரிக்கா விடுதலை பெற்றும் பிரச்சினைகளால் அலைக்கழிக்கப்படுவதையும் வங்க தேசம் பட்டினியாலும், பசியாலும் வாடுவதையும் , அதே நேரம் சீனா வளர்ந்துள்ளதையும் ஒப்பிட்டுக்காட்டி விளக்கியிருப்பது சிறப்பு.

**- இரா. கோபல்**
சோத்துப்பாக்கம்

### அருகதை இல்லை....

வாக்களிக்க வேண்டாம் என்று முடிவெடுத்தால் அரசியல் பற்றி அலச த.தே.பொ.க. கட்சிக்கு அருகதை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வாக்கு என்பதுதான் அரசியல் அதிகாரத்தை உருவாக்கும் அடிப்படையாக நம் நாட்டில் உள்ளது. தேர்தலில் பங்கு பெறாமல் இருப்பதை விட, வாக்குப் போடாமல் இருப்பது ஆபத்தானது. வாக்களிப்பவர்களைப் பற்றி கேவலமானவர்கள் என்று நினைக்கிறீர்கள்.

உதயை மு. வீரய்யனின் நாய்ப்பால் உதாரணம் அருமை.

**- வீ. தர்மதாஸ்**
திருவாரூர்

(குறிப்பு: வாக்களிப்பவர்களைக் கேவலமாக ஒரு போதும் த.தே. பொ.க. கருதவில்லை. வாக்களிக்கும் உரிமையை மதிக்கிறது. வாக்களிக்காமல் இருப்பது ஒரு போராட்ட உரிமை என்ற அடிப்படையிலேயே வாக்களிப்பைப் புறக்கணிக்கக் கோருகிறது. ஆங்கிலேயே அரசு நடத்திய தேர்தல்களைப் புறக்கணிக்குமாறு காந்தி கூறியதை நினைவு கூரவும். வாக்குச் சீட்டிலிருந்து அரசாங்கப் பதவிகள் கிடைக்கலாம். அரசு அதிகாரம் கிடைப்பதில்லை. அரசாங்கப் பதவிகள் (Government Posts) வேறு அரசு அதிகாரம் ( Stae Power) வேறு - ஆ.ர்.)

### பெண்கள் இடஒதுக்கீடு வேறு அளவு கோலா?

திரு. கி.வெங்கட்ராமன் எழுதிய மீண்டும் ஒரு மனுவாதத் தீர்ப்பு படித்தேன். கீழ்நிலைப் படிப்புகளுக்கு இடஒதுக்கீடு இருப்பது நியாயமானால், அதே நியாயம் மேல்நிலைப்படிப்புகளுக்கும் பொருந்தும் என்ற கி.வெயின் கூற்று மிகச்சரி. ஆனால் சில மாதங்களுக்கு முன்பு பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு பற்றி விவாதம் வந்த போது தாழ்த்தப்பட்ட மலைவாழ் பிற்படுத்தப்பட்ட மகளிருக்கு உள் ஒதுக்கீடு தேவையில்லை என தமிழர் கண்ணோட்டத்தில் கி.வெ. எழுதினார். ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலரையும் உள்ளடக்கிற பொதுப்பகுதியில் சாதிஅடிப்படையில் இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிற தமிழர்கண்ணோட்டம் பெண்கள் இடஒதுக்கீட்டில் மட்டும் சாதி அடிப்படையில் உள்ஒதுக்கீட்டை எதிர்ப்பது சரியா? மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தினால் நலமாக இருக்குமோ.

**கி. சா. சஸ்டீன் ராசு**
மேட்டூர்அணை-2.

**ஆசிரியர் குழு விளக்கம்:**

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட/ மலை வாழ் மக்களுக்கு ஒதுக்கீடு பற்றிய சிக்கல் எழவில்லை.அரசமைப்புச் சட்டத்தில் இதற்கு வகை இருப்பதால் பெண்கள் இட ஒதுக்கீட்டிலும் இதுவரும். பிற்படுத்தப்பட்டோர், மதசிறுபான்மையினர் பற்றி தான் இந்த சிக்கல். பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் சாதி அடிப்படையில் உள்ஒதுக்கீடு வேண்டாம் என்று நாம் கூறவில்லை (அக்கட்டுரை வந்தஇதழை மீண்டும் படிக்கவும்). மாறாக உள் ஒதுக்கீட்டை காரணமாக வைத்து பெண்களுக்கு 33% ஒதுக்கீட்டை பின்னுக்கு தள்ளிவிடக் கூடாது என்பதே நமது நிலை. ஒட்டு மொத்தமாக பெண்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டேவந்துள்ளனர். இந்த நாடாளுமன்றத் தேர்தலை பார்த்தாலும் இது விளங்கும். பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். உள் ஒதுக்கீட்டை அதற்கடுத்து செயல் படுத்தலாம் என்பதே நமது நிலை.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

அக்டோபர் 1999

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்

# மக்களைக் கெடுத்த கட்சிகளும் மக்களவைத் தேர்தல் முடிவுகளும்

பதின்மூன்றாவது மக்களவைத் தேர்தலில் தனியொரு கட்சிக்கு அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலை தொடர்கிறது. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி பெரும்பான்மை பெறும் நிலை உள்ளது. அதாவது 292 இடங்களுக்குக் குறையாமல் இம் முன்னணி பெறும். அறுதிப் பெரும்பான்மைக்கு மேலே 20 இடங்கள் கூடுதலாக இருக்கும்.

காங்கிரஸ் கட்சிக்குப் பழைய நிலவரப்படி 140 ஐச்சுற்றி இடங்கள் கிடைக்கும். (அனைத்து முடிவுகளும் அதிகாரப்பூர்வமாக வராத நிலையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.)

இடது சாரிகளைப் பொறுத்தவரை மேற்கு வங்கத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அனைத்திந்திய அளவில் எண்ணிக்கையில் அவர்களுக்குப் புதிய முன்னேற்றம் இல்லை.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் கடந்த நாடாளுமன்றம் போல் இதுவும் தொங்கு நாடாளுமன்றமாக இருக்கும். தெலுங்கு தேசம், பா.ஜ.க.வின் கூட்டணி அரசில் பங்கேற்காமல் வெளியில் இருந்து கொண்டு அதை ஆதரிக்கும் என்று அறிவித்துள்ளார் சந்திரபாபு நாயுடு. தெலுங்கு தேசத்திற்கு 30 மக்களவை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

வெற்றி நிலைமை பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது. அனைத்திந்திய அளவில் ஒரு கோட்பாட்டிற்கு ஆதரவாக - ஒரு திட்டத்திற்கு ஆதரவாக அல்லது குறிப்பிட்ட கோட்பாடு மற்றும் திட்டத்திற்கு எதிராக பெருவீச்சில் மக்கள் வாக்களிக்கவில்லை. அனைத்திந்தியத் தன்மை என் ஒன்று இதில் வெளிப்படவில்லை.

குறிப்பாக கார்கில் போர் - பா.ஜ.க அணிக்குப் பெருஞ்சாதகத்தை உண்டாக்கிவிடவில்லை, சிறிதளவு இதன் செல்வாக்கும் அவ்வணிக்கு ஆதரவாக இருந்திருக்கலாம். கார்கில் போரில் இறந்தவர்களில் அதிக எண்ணிக்கையினர் பஞ்சாபைச் சேர்ந்தவர்கள். ஆனால் பஞ்சாபில் பா.ஜ.க. வும் அங்கே அதன் கூட்டணியான ஆளும் பாதல் அகாலிதளமும் படு தோல்வியடைந்துள்ளன. காங்கிரஸ் கட்சி அங்கு பெரு வெற்றி பெற்றுள்ளது. பாதல் அகாலி தள ஆட்சியின் மீது ஏற்பட்ட அதிருப்தி, செல்வாக்குமிக்க தோரா அக்கட்சியை விட்டுப் போனது போன்றவை அங்கு செயல்பட்டிருக்கக் கூடும்.

உ.பி.யில் பா.ஜ.க. ஏற்கெனவே 57 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. இப்போது அது குறைந்து விட்டது. முலாயம் சிங் கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் தங்கள் செல்வாக்கை ஓரளவு நிலை நாட்டியுள்ளன. காங்கிரஸ் கட்சிக்குக் கூடுதல் இடங்கள் கிடைத்துள்ளன.

ம.பி.யில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. அதன் மீது

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**பெ. மணியரசன்**
ஆசிரியர்,
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : **32994**

அச்சிட்டோர்
**நீட் பிரிண்டர்ஸ்,**
சென்னை - 600 003.

வடிவமைப்பு
**காவிரி கணிப்பொறி அச்சு,**
தஞ்சாவூர் - 613 001.

❖❖❖

அட்டைப்படம் : ஜானகிராமன்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவோ என்னவோ, பா.ஜ.க. இங்கு பெரு வெற்றி ஈட்டியுள்ளது.

தில்லியில் உள்ள 7 இடங்களையும் பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. ஏற்கெனவே அதற்கு அங்கு 6 இடங்கள் இருந்தன. ஆனால் கடந்த ஆண்டு அங்கு நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில், ஆளுங் கட்சியான பா.ஜ.க. தோற்கடிக்கப்பட்டு, காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியது. இதற்குக் காரணம் அப்போது ஏற்பட்ட வெங்காய விலை உயர்வு மற்றும் தில்லி பா.ஜ.க. வில் நிலவிய உட் கட்சிக் குழப்பம் போன்றவை என்று கருதலாம்.

கர்நாடகத்தில் ஜே.எச்.பட்டேல் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ளது. (அக்டோபர் 10 க்கு மேல் காவிரிநீர் ஆணைக்குழு கூட்டத்தை வைத்துக் கொள்ளாம்என்று காலம்கடத்தி வந்த ஜே.எச் பட்டேல் காலாவதியாகிவிட்டார். காங்கிரஸ் முதலமைச்சர் அந்த ஆணைக்குழுவையே ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்ல முடியாது).

தமிழ்நாட்டில், அ.தி.மு.க. தென் மாவட்டங்களில் கணிசமாக வெற்றி பெற்றுள்ளது. இதற்கு, தேவர் வகுப்பினர் ஆதரவும் குறிப்பிட்ட பங்களித்திருக்கும். அதே போல் வட மாவட்டங்களில் தி.மு.க. அணி வெற்றி பெற்றதற்கு பா.ம.க. மூலம் கிடைத்த வன்னியர் ஆதரவும் பங்களித்திருக்கும்.

மாற்று அணியாக நின்ற த.மா.க. அணிக்கு தலித் வாக்குகள் கணிசமாகக் கிடைத்திருக்கிறது.

மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த தேர்தலில் தனித்து நின்று ஒரு லட்சத்திற்கு மேல் வாக்கு வாங்கியிருந்தது. அந்த பலத்துடன் அ.தி.மு.க. கூட்டணி பலம் சேர்ந்ததும் அது வெற்றி பெற்றுள்ளது. ஆனால் நாகையில் சி.பி.ஐ. தோற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

வகுப்புவாத எதிர்ப்பு - ஊழல் எதிர்ப்பு என்பவை கோட்பாட்டளவில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றோ அல்லது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்றோ முடிவு செய்ய முடியாது. (பா.ஜ.க. வெற்றி மற்றும் பெரியகுளத்தில் தினகரன் வெற்றி போன்றவற்றைக் கவனிக்கவும்.) அவரவர் சக்தி - கூட்டணி சக்தி - உள்ளூர் நிலைமைகள் இவைகளே, வெற்றி தோல்வியைத் தீர்மானித்திருக்கின்றன.

எல்லாக் கூட்டணிகளும் சந்தர்ப்ப வாதக் கூட்டணிகள் ஆனதால், மக்கள் கொள்கை கோட்பாடுகள் அடிப்படையில் புதிய பாய்ச்சலாக எந்த அணிக்கும் ஆதரவு தந்து விடவில்லை. கட்சிகள் மக்களைக் கெடுத்து வைத்திருக்கின்றன. மக்களுக்கு நம்பிக்கை தரக் கூடிய சரியான மாற்று முன் வைக்கப்படவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அனைத்திந்தியத் தன்மை எதுவும் வெளிப்படவில்லை. வாக்களிக்காத மக்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. கள்ள ஓட்டு எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. சாதிவாதத்திற்கு ஊக்கமளிக்கக் கூடிய பாதகமான சூழலும் உருவாகியுள்ளது. இம்முறை தமிழ் நாட்டில் சாதிவாதம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது.

இவைகள் ஊடாகத்தான் தேர்தல் முடிவுகளைப் பார்க்க வேண்டும். புரட்சிகர தமிழ்த் தேசியத்தை மாற்றாக வைக்க வாய்ப்பளிக்க கூடிய சூழலே உள்ளது

# கானல் நீரில் மீன் பிடிக்கும் கலைஞர் கருணாநிதி

பருவ மழையுடன் உழவர்கள் நடத்தும் சூதாட்டத்திற்குப் பெயர் விவசாயம்! கர்நாட அரசுடன் தமிழக அரசு நடத்தும் சூதாட்டத்திற்குப் பெயர் காவிரி உடன்பாடு அல்லது பேச்சுவார்த்தை!

இந்த இரண்டு வகை சூதாட்டங்களிலும் பலி கடா ஆனாவர்கள் காவிரி பாசனப் பகுதி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளிகள்.

மாநிலங்களுக்கிடையிலான ஆற்று நீர்ச் சிக்கலில் செயல்படுத்தும் அதிகாரம் படைத்த இந்திய அரசு தீர்ப்பளிக்காத பஞ்சாயத்தாராக இருந்திருக்கிறது அல்லது வெறும் பார்வையாளராக இருந்திருக்கிறது.

மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர் தகராறு என்று வந்து விட்டால், அதில் தீர்வு காண்பதற்கான, தீர்வினை செயல்படுத்துவதற்கான மேலதிக அதிகாரம் இந்திய அரசிடமே உள்ளது.

அரசமைப்புச் சட்ட விதி 262, மாநிலங்களுக்கிடையிலான, தண்ணீர்த் தகராறைத் தீர்த்து வைக்கும் வகையில் சட்டம் ஒன்றை இயற்றிக் கொள்ள நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. அவ்வாறு 1956-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர் தகராறு சட்டம் -1956 என்பதாகும்.

அந்தச் சட்டத்தின் விதி 4(1) -ன்படி சமரசப் பேச்சுகளில் தீர்வு ஏற்படாத நிலையில், தொடர்புடைய மாநிலம் ஒன்று நடுவர் மன்றம் கோரினால் அம்மன்றத்தை நிறுவிட அதுமட்டும் போதாது. சமரசப் பேச்சுகள் இனி பலன் அளிக்காது என்று இந்திய அரசும் கருதினால் தான் - அது நடுவர் மன்றத்தை அமைக்கும்.

தமிழக அரசைப் பொறுத்தவரை 1970 பிப்ரவரி மாதமே (அப்போதைய தி.மு.க. அரசு) காவிரிச் சிக்கலுக்கு நடுவர் மன்றம் கோரியது. ஆனால் இந்திய அரசு அதை விரும்பாததால் நடுவர் மன்றம் அமைக்கப்படவில்லை. அடுத்து 1975 மே மாதம் நடுவர் மன்றம் அமைக்கும்படி இந்திய அரசைத் தமிழக அரசு கோரியது. அப்போதும் இந்திய அரசு நடுவர் மன்றம் அமைக்க விரும்பவில்லை. கர்நாடக அரசின் எதிர்ப்பின் காரணமாகவே, இந்திய அரசு காவிரிச் சிக்கலுக்கு நடுவர் மன்றம் அமைக்க முன் வரவில்லை. 1956 ஆம் ஆண்டின் தண்ணீர்த் தகராறுச் சட்ட விதி 4(1) -ன் படி தொடர்புடைய எதாவதொரு மாநிலம் கோரினால் மட்டும் போதாது. இந்திய அரசும் விரும்பினால் தான் நடுவர் மன்றம் அமைக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட இரு சந்தர்ப்பங்களிலும் (1970,1975) இந்திய அரசு நடுவர் மன்றம் அமைக்க முன்வராததன் காரணம் அது கர்நாடக அரசின் எதிர்ப்பிற்கு செவி சாய்த்ததே ஆகும்.

தமிழக அரசு மூன்றாவது தடவையாக 1986 ஜுலை 6 ஆம் நாள், (அ.இ.அ.தி.மு.க. ஆட்சி) நடுவர் மன்றம் கோரியது. அப்போதும் இந்திய அரசு செவி சாய்க்க வில்லை. அதற்கு முன் 1983-ஆம் ஆண்டு "தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்பு சங்கம்" என்ற அமைப்பு நடுவர் மன்றம் கோரி உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது. இந்த வழக்கிக்கின் முதன்மை வேண்டுகோளே நடுவர் மன்றம் அமைக்கும்படி இந்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கட்டளை இடவேண்டும் என்பதுதான். இவ்வழக்கில் தானும் ஒரு வாதியாக 1987 -ஆம் ஆண்டு தமிழக அரசு சேர்ந்து கொண்டு - அதே வேண்டுகோளை முன்வைத்தது. 1990 ஆம்ஆண்டு தி.மு.க.அரசு நடுவர்மன்றக் கோரிக்கைக்கு ஆதரவாக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

வி.பி.சிங் தலைமையில் இருந்த அப்போதைய இந்திய அரசு, உச்ச நீதி மன்றத்தில், தன் நிலைபாடு இன்னதென்று தெரிவிக்காமல், உச்சநீதிமன்ற ஆணையை ஏற்பதாக அதனிடம் தெரிவித்தது. நேரடியாக நடுவர் மன்றம் அமைத்திட ஆதரவு தெரிவிக்காவிட்டாலும் அக்கோரிக்கையை எதிர்க்காமல் இருந்து உதவியது வி.பி.சிங் அரசு.



சாய்ந்து வெடித்த மேட்டூர் அணை

ஒரு மாதத்திற்குள் நடுவர் மன்றம் அமைக்கும்படி உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா 4.5.1990 அன்று இந்திய அரசுக்கு ஆணை பிறப்பித்தார். 2.6.90 அன்று நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

நடுவர் மன்றம் 1991 ஜுன் 25 அன்று இடைக்காலத் தீர்ப்பளித்தது. அதன்படி 205 TMC, தண்ணீர் கர்நாடகம் மேட்டூர் அணைக்கு விட வேண்டும். இத் தண்ணீரை மாதவாரியாக எவ்வளவு தரவேண்டும் என்றும் வாரவாரியாக எவ்வளவு தரவேண்டும் என்றும் நடுவர் மன்றம் பட்டியலிட்டது.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்புப்படி கர்நாடகம் விட வேண்டிய 205TMC மாதவாரியாக:

| | | | |
|---|---|---|---|
| ஜுன் | - | 10.16 | TMC |
| ஜுலை | - | 42.76 | TMC |
| ஆகஸ்ட் | - | 54.72 | TMC |
| செப்டம்பர் | - | 29.36 | TMC |
| அக்டோபர் | - | 30.17 | TMC |
| நவம்பர் | - | 16.05 | TMC |
| டிசம்பர் | - | 10.37 | TMC |
| ஜனவரி | - | 2.51 | TMC |
| பிப்ரவரி | - | 2.17 | TMC |
| மார்ச் | - | 2.40 | TMC |
| ஏப்ரல் | - | 2.32 | TMC |
| மே | - | 2.01 | TMC |

இதை ஒவ்வொரு மாதமும் 4 வாரங்களில் சமபாகமாக பகிர்ந்து தரவேண்டும். எ.டு. ஜுன் மாதம் ஒரு வாரத்திற்கு 2.54 TMC தர வேண்டும். ஒருவாரம் உரிய அளவு தரமுடியவில்லை எனில் அடுத்த வாரம் அந்த பாக்கி நீரை சேர்த்துத் தர வேண்டும்.

நடுவர் மன்றம் கொடுத்த இடைக்காலத் தீர்ப்பு நமக்கு மிகவும் குறைந்த அளவாக 205TMC வழங்க வகைசெய்தது. ஆனால் 1934 முதல் 1984 வரை மேட்டூருக்குக் கர்நாடகாவிலிருந்து வந்த காவிரி நீர் சராசரியாக 361.5TMC நடுவர் மன்றம் கணக்கில் எடுத்துக் கொண்ட 1980 - 81 - 1989-90 வரை உள்டள பத்தாண்டுகள் மிகவும் பாதிக்கப்பட்ட ஆண்டுகள். 1974 - லிருந்து 1924 ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்டதாக, கர்நாடகம் தன்னிச்சையாக முடிவு செய்து தண்ணீர் தர மறுத்த ஆண்டுகுள் அவை. அப் பத்தாண்டுகளில் சராசரி எடுத்து, மேட்டூருக்கு வந்த தண்ணீர் ஆண்டுக்கு 229.16TMC என்று கணக்கிட்டு அதையும் குறைத்து 205TMC என்று தீர்ப்பளித்தது.

அப்போது இந்தத் தீர்ப்பின் குறைந்த அளவை எதிர்த்துத் தமிழகம் போராடாதது, கர்நாடகத்திற்கு தமிழ் நாட்டின் கையாலாகாத் தனத்தை அறிந்து கொள்ள வைத்தது. கர்நாடகம் கொம்பில் ஏறிக் கொண்டது.

இந்த 205TMC தண்ணீரைக் கர்நாடகம் தமிழகத்திற்குத் தரச் செய்ய வேண்டிய பொறுப்பு சட்டப்படி இந்திய அரசைச் சேர்ந்தது. மாநிலங்களுக் கிடையிலான தண்ணீர் தகராறு சட்ட விதி 6-ன்படி - இத்தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவது, விதி 6 (அ) வின் படி - இதை செயல்படுத்துவதற்குரிய திட்டம் மற்றும் அமைப்புகளை உருவாக்குவது இந்திய அரசின் சட்டக் கடமை.

1991 டிசம்பர் 10 ஆம் நாள் தான் அப்போதைய நரசிம்மராவ், அரசு, இடைக்காலத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது. அது பொறுக்காத கர்நாடக இனவெறியர்கள் கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைக் கொலை செய்தனர்; வீடுகளைக் கொளுத்தினர். தமிழ்ப் பெண்களைப் பாலியல்



படிப்பகம்

www.padippakam.com

வன்முறைக்கு உட்படுத்தினர். ஒரு லட்சம் தமிழர்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக ஓடிவந்தனர்.

இவ்வளவுக்குப் பின்னரும், இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்தும் திட்டத்தையும் அமைப்புகளையும் இந்திய அரசு உருவாக்கவில்லை. இடைக்காலத்தீர்ப்பை செயல்படுத்த முடியாது என்று முரட்டுத்தனம் செய்யும் கர்நாடக அரசுக்கு மறைமுக ஆதரவாளராகவே இந்திய அரசு இருந்து வருகிறது.

கடைசியாக 1998 ஆகஸ்ட் 7,8 நாட்களில் தில்லியில் பிரதமர் வாஜ்பாய் முன்னிலையில், தமிழக, கர்நாடக, கேரள, புதுவை முதலமைச்சர்கள் பேச்சு நடத்தி இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்துவதற்கு திட்டமும் அமைப்புகளும் உருவாக்கினர்.


காவிரி ஆற்று ஆணைக்குழு (Cauvery River Authority) கண்காணிப்புக்குழு (Monitoring Committee) என்று இரு அமைப்புகளை உருவாக்கினார்கள். இவ்விரு அமைப்புகளும் சோளக்கொல்லை பொம்மைகள்! இவைகள் அதிகார மற்றவைகளாக உருவாக்கப்பட்டன.

இதற்கு முன் குஜரால் பிரதமராக இருந்தபோது ஒருவரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதைக் கர்நாடகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக கானல் நீரில் மீன் பிடிக்கும் புதிய வரைவுத் திட்டத்தை உருவாக்கினார்கள்.

புதிய வரைவுத் திட்டத்தின்படி காவிரி ஆணைக்குழுவிற்குப் பிரதமர் தலைவராக இருப்பார். நான்கு மாநில முதல்வர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இதில் அனைவருக்குமிடையே கருத்தொற்றுமை ஏற்பட்டால்தான். ஒரு முடிவு எடுக்க முடியும்.

குஜரால் அரசின் பழைய வரைவுத் திட்டப்படி ஆணைக்குழுவின் தலைவராக மத்திய நீர்ப்பாசனத்துறை செயலாளர் இருப்பார். நான்கு மாநிலத் தலைமைச் செயலர்கள் உறுப்பினர்களாக இருப்பர். இவ்வாணைக்குழு பெரும்பான்மை அடிப்படையில் முடிவுகள் எடுக்கும். பிரச்சினைக்குரிய மாநிலத்தின் பிரதிநிதி இரண்டாவது தடவையாகவும் கூட்டத்திற்கு வரவில்லையெனில் அவர் இல்லாமலேயே ஆணைக்குழு முடிவெடுக்கும். இவ்வாணைக் குழுவின் முடிவுகளை எந்த மாநிலமாவது செயல்படுத்தாவிட்டால், அந்த மாநிலத்தில் உள்ள நீர்த் தேக்கங்களை ஆணைக்குழு தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளும். (அவ்வாறு பட்டியலிடப்பட்ட அணைகள் கர்நாடகம் 1 கிருஷ்ணராஜசாகர் (2) கபினி (3) ஹேமாவதி (4) ஹேரங்கி தமிழ்நாடு 1. மேட்டூர் 2. கல்லணை 3. பவானி சாகர்.

இந்த ஆணைக்குழுவிற்கு உதவியாக ஒழுங்குபடுத்தும் குழு (Regulating Committee) உருவாக்கப்படும். 4 மாநிலதலைமைப் பாசனப் பொறியாளர்கள் இதன் உறுப்பினர்கள். காவிரி ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினர் இதன் தலைவர்.



சட்ட விரோத ஹேரங்கி அணையில் தளும்பி நிற்கும் தண்ணீர்

இது, கர்நாடகப் பாசனப் பரப்பு 11.2 லட்சம் ஏக்கருக்கு மேல் அதிகரிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது, கர்நாடகம் புதிய பாசனத்திட்டங்களை நிறைவேற்றாமல் பார்த்துக் கொள்வது ஆகியவை ஆகும். இது மாதம் ஒரு முறை கூடும். தேவைப்பட்டால் 48 மணி முன்னறிவிப்பில் அவசரக் கூட்டம் நடத்தலாம்.

ஆணைக்குழு மற்றும் ஒழுங்குப்படுத்தும் குழுவின் தலைமையகம் கோயமுத்தூரில் இருக்கும்.

ஆனால் கலைஞர் கருணாநிதி ஏற்றுக் கொண்ட புதிய வரைவுத் திட்டம் மேற்கண்ட அதிகாரம் எதுவும் இல்லாதது. பிரதமர் வாஜ்பாயியால் ஆணைக் குழுக் கூட்டத்தைக் கூட கூட்டமுடியவில்லை. 29.9.99 அன்று ஆணைக்குழுக் கூட்டத்தை பிரதமர் கூட்டினார். அக்டோபர் 10க்கு மேல் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார் கர்நாடக முதல்வர். இப்பொழுது அவர் தேர்தலில் தோற்றுவிட்டார். காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கவுள்ளது. அக்டோபர் மாதமும் ஆணைக்குழுவைக் கூட்ட முடியாத நிலை ஏற்படும். அது மட்டுமல்ல, இந்த ஆணைக்குழுவை மறுபரிசீலனை செய்ய



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் என்று இதை புதிய கர்நாடக முதல்வர் அதனை முடக்கி விடவும் கூடும். குஜ்ரால் காலதிட்டப்படி அதிகாரிகளைக் கொண்ட குழுவாக இருந்திருந்தால் தேர்தல் நடந்தாலும் - அதிகாரிகள் கூட்டம் தனியே நடந்து முடிவுகள் எடுத்திருக்க முடியும்.

கட்டுப்படாத மாநில அணைகளைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளும் அதிகாரமும் புதிய ஆணைக்குழுவிற்குக் கிடையாது. கண்காணிப்புக்குழு என்பது ஆணைக் குழுவிற்குப் பரிந்துரை வழங்குமே தவிர, அதற்கென்று, அதிகாரம் எதுவும் கிடையாது. அதை அண்மையில் அனுபவ ரீதியாக நாம் பார்த்தோம்.

அதிகாரமில்லாத புதிய வரைவுத் திட்டத்தை ஏன் ஏற்றுக் கொண்டீர்கள் என்று முதல்வர் கருணாநிதியைக் கேட்டால் அதற்கு அவர் சொல்கிறார், "கர்நாடகம் ஒத்துக்கொள்ளவில்லை எனவே ஒரு செயல்திட்டம் வராமல் போவதை விட, சாத்தியமாகக் கூடிய திட்டத்தை ஏற்றுக் கொண்டேன்" என்கிறார்.

இந்த இடத்தில் முதல்வர் கருணாநிதி தவறான தகவல் தருகிறார். ஏற்கெனவே தமிழக அரசு, இது குறித்துத் தொடுத்த வழக்கு உச்ச நீதிமன்ற விசாரணையில் இருந்தது. இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்தும் அமைப்புகளை உருவாக்கி அதனைச் செயல்படுத்த இந்திய அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் ஆணை வழங்க வேண்டும் என்று விண்ணப்பித்து உச்ச நீதிமன்றத்தில் தொகுத்திருந்த வழக்கு இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தது. 21.7.98 அன்று நடந்த வழக்கு விசாரணையில் உச்சநீதிமன்றம், இனியும் காலதாமதம் செய்ய முடியாது. கடைசி வாய்தா - 12.8.98, அன்று செயல்திட்டத்தோடு இந்தியஅரசு வர வேண்டும் என்று கூறியிருந்தது. நீதி மன்றப் போக்கிலேயே விட்டிருந்தால் 12.8.98 அன்று உச்ச நீதி மன்றத் தீர்ப்பாக உயிர்த்துடிப்புள்ள, அதிகாரம்படைத்த செயல்திட்டம் கிடைத்திருக்கும். உச்ச நீதி மன்றத்தின் கிடுக்கிப் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளவே, கர்நாடகம், பிரதமர் மூலம் பேச்சு வார்த்தை நாடகம் நடத்தி உதவாக்கரை செயல்திட்டம் உருவாகச் சதி செய்தது.

ஆட்சிக் கலைப்பு, கோரிக்கை ஜெயின் ஆணைக்குழு விசாரணை என்பவற்றால் அஞ்சியிருந்த கருணாநிதி தமிழக நலனைப் பலியிட்டு, டெல்லிக்கு நல்ல பிள்ளையாகி, காவிரி உரிமையைக் காவு கொடுத்தார்.

உடன் படிக்கை மூலம் செயல்திட்டம் உருவாகியுள்ளது என்று உச்சநீதி மன்றத்தில் தமிழகம் சொல்லி, அந்த வழக்கை அப்படியே முடித்துக் கொள்ளும்படி விட்டது.

வழக்கும் போயிற்று, உருப்படியான திட்டமும் போயிற்று.

கர்நாடகம் 205TMC யை ஏற்றுக் கொண்டதே வெற்றியில்லையா என்றார்கள். நவம்பர் டிசம்பர் மாதங்களில் பெய்யும் மழையில் ஓடிவரும் உபரி மேட்டூர் அணைக்குத் தானே வரும். அதைக் கணக்குக் காட்டி 205 TMC அளவை ஒப்பேற்றலாம் என்பதே கர்நாடகத் திட்டம். இதை அப்போதே த.தே.பொ.க. சுட்டிக் காட்டியது.

இப்பொழுது கர்நாடகம் அதைத்தான் சொல்கிறது டிசம்பருக்குள் உரிய தண்ணீரைக் கொடுத்து விடுவோம் என்கிறது.

மாதாமாதம் - வாராவாரம் நடுவர் மன்றம் குறிப்பிட்ட தண்ணீர் வந்தால்தான் ஓரளவாவது குறுவையைக் காப்பாற்ற முடியும்.

இவ்வாண்டு ஜுலை மாதம் 42.76 TMC தண்ணீருக்குப் பதிலாக 23.94 TMC தண்ணீர்தான் வந்தது 18.82TMC தண்ணீர் பாக்கி இருந்தது. இதை ஜுலை கடைசியிலோ ஆகஸ்டிலோ வலியுறுத்திக் கேட்கவில்லை தமிழக அரசு. ஏன்?

மூன்று மாதத்திற்கு ஒருமுறை கண்காணிப்புக்குழு கூட வேண்டும். கடந்த ஓராண்டாகக் கூடாமல் செப்டம்பர் மாதம் மட்டும் கூடியது ஏன்? தமிழக அரசு என்ன செய்து கொண்டிருந்தது?

மழை பெய்து விட்டால் பிரச்சினை பெரிதாகாது என்ற எண்ணத்தில்தானே தமிழக ஆட்சியாளர்கள் இருந்திருக்கிறார்கள். இதே எண்ணத்தில் தான் கர்நாடகமும் இருக்கிறது.

நடப்பு சாகுபடிக்கு தண்ணீர் இல்லாமல் குறுவைப் பயிர்கள் கருகுவதும் சம்பா, தாளடி நடவுசெய்யமுடியாமல் பெருஞ்சிக்கல் தோன்றியுள்ளதும் தமிழகம் தழுவிய அளவில் உணரப்பட்டுள்ளது. விவசாயிகளும் போராடுகிறார்கள். ஆனால் கர்நாடக அணைகளில் 68 டி.எம்.சி தண்ணீர் உள்ளதை கண்காணிப்புக் குழு நேரில் பார்த்து உறுதி செய்துள்ளது. கண்காணிப்புக்குழு விடச் சொன்ன மிக மிகக் குறைந்த 9 டி.எம்.சி. தண்ணீரைக் கூட கர்நாடகம் விட மறுத்து விட்டது. வாஜ்பாயியும், கருணாநிதியும் கடந்த ஆண்டு ஒப்பந்தத்தின்படி தண்ணீர் பெற முடியவில்லை.

**முதலமைச்சர் கருணாநிதி இப்பொழுதாவது தமது தவறை உணர்ந்தால், தாம் ஏற்றுக் கொண்ட காவிரி ஒப்பந்தத்திலிருந்து உடன் விலகி விடவேண்டும். குஜ்ரால் கால வரைவுத் திட்டத்திற்கு உயிர் கொடுக்கக் கோர வேண்டும். காவிரி நீர் கொடுக்காத கர்நாடகத்திற்கு நெய்வேலி கல்பாக்கம் மின்சாரம் அனுப்பமுடியாது என்று அவர் சொல்ல வேண்டும். மின்சாரம் இந்திய அரசுக்குச் சொந்தமானாலும் அது செல்லும் கம்பி தமிழக அரசுக்குச் சொந்தம்.**

**காவிரி என்ற ஒரு இயற்கை வளத்தைப் பாதுகாக்காத இந்திய அரசே காவிரிப் படுகை பெட்ரோலியம் என்ற இன்னொரு இயற்கை வளத்தை எடுக்காதே என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவிக்க வேண்டும்.**

முதலமைச்சர் கருணாநிதியின் முகம் பார்த்து நிற்காமல் மேற் கண்ட போராட்டத் திட்டங்களை செயல்படுத்தத் தமிழ் மக்கள் போர்க் கோலம் பூண வேண்டும்.

கர்நாடக, தில்லி அரசுகளை நிர்ப்பந்திக்காமல் காவிரி உரிமையை நம்மால் மீட்க முடியாது.

ooooo



படிப்பகம்

www.padippakam.com

# “மனுதர்ம” நீதியா? “மக்கள் தர்ம” நீதியா?

- இராசேந்திரசோழன்

வருணக் கோட்பாட்டையே வாழ்வின் 'தர்மக் கோட்பாடா'கப் போதித்து, சாதிய இருத்தலையே 'சமூக ஒழுங்கமைவுக்கான நீதியின் இருத்தலா'கச் சித்தரித்து வந்தவர்கள், கால மாறுதல்களினால் எவ்வளவுதான் கட்டுக்குள் வைக்கப்பட்ட போதிலும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மீண்டும், மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ளவே முயன்று வருகிறார்கள்.

எந்தப் பிரச்சினையிலும் கிடைக்கிற சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, எப்படியாவது தங்கள் ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோள்.

இது அரசியல், ஆட்சி, மத பீடம், கல்வி நிறுவனம், நீதிமன்றம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்தந்த பீடத்தின் ஊடேயும் தன் ஆதிக்கப் பிடியை இறுக்க முயல்வதே இவர்களின் இலக்கு.

இப்படிப்பட்ட செயல்பாடுகளின் ஒரு வெளிப்பாடுதான் கடந்த 17.9.99 அன்று தில்லி உச்ச நீதிமன்றம் “பதவி உயர்வில் இட ஒதுக்கீடு என்பதை ஒரு உரிமையாகக் கோர முடியாது” என்று அளித்த தீர்ப்பு.

பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த அஜித்சிங் என்பாரது, மற்றும் இதே போன்ற தன்மையுடைய, ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களது வழக்கின் மீது விசாரணை நடத்திய, தில்லி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நிதிபதி ஏ.எஸ்.ஆனந்த், நீதிபதி வெங்கிடேசுவரன், நீதிபதி பட்நாயக், நீதிபதி குர்துகர், நீதிபதி ஜகன்னாத்ராவ் ஆகிய ஐந்து பேரைக் கொண்ட அரசமைப்புச் சட்ட ஆயம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிக்கு வந்தவர்கள், அதே அடிப்படையில் பதவி உயர்வு பெற்று சுழற்சி முறையில் உயர் பதவியில் அமர்ந்தவர்கள், தங்கள் அடுத்த பதவி உயர்வுக்கான தகுதிக்கு, தாங்கள் முதல் பதவி உயர்வு பெற்று பணியில் இருந்த தகுதிப்பான்மையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுமாறு கோர முடியாது. காரணம், பொதுப்பிரிவில் இவர்களை விடவும், பணிமூப்பு அதிகம் உள்ளவர்களின் பதவி உயர்வு இதனால் பாதிக்கப்படுகிறது. அவர்களது பணிமூப்பு முன்னுரிமை மறுக்கப்படுகிறது. எனவே ஒட்டு மொத்த பணி மூப்பின் அடிப்படையிலேயே இரண்டாவது பதவி உயர்வும் அதற்கடுத்த பதவி உயர்வுகளும் அளிக்கப்பட வேண்டும் என்பதே இத்தீர்ப்பின் சாரமாகும்.

மேலோட்டமாகப் பார்க்க இது நியாயம்தானே, பொதுப் பிரிவில் பணி மூப்பு அதிகம் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிக்காமல், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேலே வந்த பணி மூப்பு குறைவாக உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதா என்று கூட இயல்பாக சிலருக்குத் தோன்றலாம்.

எனில், ஆழ்ந்து நோக்க இதில் உள்ள ஆபத்துக்களையும், இதனால் ஏற்படும் பின் விளைவுகளையும் நாம் உணர முடியும்.

மீபத்தில்தான் 12.8.99 ல் தில்லி உச்ச நீதி மன்றம் “உயர் தனிச் சிறப்புப் படிப்புக்களில் மாணவர்களைச் சேர்க்கும் போது மதிப்பெண் தகுதி மட்டுமே ஒரே அளவு கோலாக கொள்ளப்பட வேண்டும்” என்று ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. அதாவது இடஒதுக்கீட்டு அளவுகோல் இதற்குப் பின்பற்றப்படக்கூடாது என்பது இதன் பொருள்.

இது எப்படி இட ஒதுக்கீட்டிற்கு எதிராகவும், மாநில உரிமைகளைப் பறிக்கும் வகையிலும் அமைந்துள்ளது என்பது பற்றி கடந்த செப்டம்பர் இதழ் தமிழர் கண்ணோட்டத்தில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அணுகு முறையின் தொடர்ச்சியே அல்லது அதன் நீட்சியே தற்போது வெளிவந்துள்ள இத் தீர்ப்பாகும்.

அதாவது முன்பு உயர் தனிக் “கல்வியில்” இட ஒதுக்கீடு கூடாது என்ற உச்ச நீதிமன்றம் இப்போது உயர் பதவிக்கான “வேலை வாய்ப்புக்களில்” இட ஒதுக்கீடு கூடாது என்கிறது.

1. முதலாவதாக இத்தீர்ப்பு இடஒதுக்கீடு என்னும் கோட்பாட்டிற்கே எதிரானதும் அதன் தத்துவத்திற்கே வேட்டு வைப்பதுமாகும். இட ஒதுக்கீட்டின் நோக்கமே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் நலிவுற்ற பிரிவினரை பிற பகுதி மக்களோடு சமப் படுத்திப் பார்க்காமல் இவர்களைத் தனிப்பிரித்து, தனிச் சலுகைகள் அளித்து, அவர்களையும் பிற பகுதி மக்கள் நிலைக்கு முன்னேற்ற முயல்வதேயாம்.

இதன்படிதான், கல்வியில், வேலை வாய்ப்பில் பொதுப் பட்டியில் எனவும், இட ஒதுக்கீட்டுப் பட்டியல் எனவும் இரு பட்டியல் இருக்கிறது. இப்பட்டியல் படி இட ஒதுக்கீட்டாளர்கள் பயணம் செய்வதும் பதவி உயர்வுகளை அடைவதும்தான் அவர்களுக்குரிய ஒதுக்கீட்டிற்கான முழுப் பலனையும் அவர்கள் பெற வாய்ப்பளிக்கும். அல்லாது எந்தக் கட்டத்திலும் இந்த இருபட்டியல்களையும் ஒரே பட்டியலாக்குவது அவர்களுக்கு இழப்பையே ஏற்படுத்தும்.



படிப்பகம்

www.padippakam.com

அப்படி இருக்க இதை விட்டு, இப்பட்டியலை பணியமர்த்தலுக்கும், முதல் பதவி உயர்வுக்கும் மட்டும் ஏற்கலாம். அடுத்தடுத்த பதவி உயர்வுகளுக்கு ஏற்க முடியாது என்பது இடஒதுக்கீட்டாளர்களுக்கு உரிய நியாயத்தை மறுப்பதாகும். இது இத்தனித் தனிப் பட்டியலை ஒரு வரம்புக்குட்பட்டு அங்கீகரித்து அதற்கு மேல் அதை மறுத்து இரண்டையும் சேர்த்து ஒன்றாக்கி இட ஒதுக்கீட்டாளர்களை பொதுப்பட்டியலுக்கு தள்ளுவதாகும். அதாவது இரண்டையும் பொதுமைப்படுத்தி, சமப்படுத்தி இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கே குழி தோண்டுவதாகும். ஏற்கெனவே சலிப்பூட்டும் அளவுக்கு பேசப்பட்ட வாதங்களில் நிராகரிக்கப்பட்ட 'நாட்டு நலன்' 'திறமை' 'திறமையின்மை' முதலான அதே கூற்றுக்களே இதற்கான நியாயங்களாக முன்வைக்கப்படுகின்றன. இது சாரத்தில் எதிர்க்கப்பட வேண்டியதாகும்.



2. அடுத்து 'நியமனம்' என்பதற்கும் "பதவி உயர்வு" என்பதற்கும் அதன் அடிப்படையில் மிகப்பெரிய வேறுபாடு ஏதும் இல்லை. 'நியமனம்' என்பது குறிப்பிட்ட ஒரு பணிக்கு குறிப்பிட்ட ஒருவரை அமர்த்துவதைக் குறிக்கும். அதே போல 'பதவி உயர்வு' என்பதும் குறிப்பிட்ட பணிக்கு குறிப்பிட்ட ஒரு வரை அமர்த்துவதையே குறிக்கும்.

இரண்டிற்குமான வேறுபாடாக 'நியமனம்' என்பது ஒருவர் புதிதாக பணியில் சேர்வதையும், 'பதவி உயர்வு' என்பது ஏற்கெனவே பணியில் உள்ளவர், அடுத்த நிலையை அடைவதையும் குறிக்கும் என்பதை ஒரு வாதமாக ஏற்றுக் கொண்டாலும், பல்வேறு துறைகளிலும் உள்ள பல உயர் பதவிகள், நேரடியாகவும் நிரப்பப்படுகின்றன, பதவி உயர்வு மூலமும் நிரப்பப்படுகின்றன. இந்த வகையில் இது இந்த வேறுபாடும் அற்று, பணி நியமனமும், பதவி உயர்வும் சாரத்தில் ஒன்றே என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும். அதாவது பணி நியமனமும், பதவி உயர்வும், குறிப்பிட்ட பணியில் ஒருவர் புதியதாக அமர்த்தப்படுவதையே அர்த்தப்படுத்தும் என்பது தெளிவுறும்.

உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே இதே அடிப்படையில் தீர்ப்பளித்ததற்கும் முன் எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. இந்திய ரயில்வேயின் பொது மேலாளர் எதிர் ரங்காச்சாரி வழக்கின் மீது, 1962ம் ஆண்டு 36(41)க்கு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் 'பணி நியமனம்' என்பது 'பதவி உயர்வையும்' உள்ளடக்கியதே எனக் குறிப்பிட்டுள்ளது.

இப்படியிருக்க, இதற்கு மாறாக அல்லது முரணாக பணி நியமனத்தையும், பதவி உயர்வையும் தனித் தனியாகப் பிரித்து, இட ஒதுக்கீடு பணி நியமனத்திற்கு அல்லது முதல் பதவி உயர்வுக்கு மட்டுமே பொருந்தும், அடுத்தடுத்த பதவி உயர்வுகளுக்கு பொருந்தாது என்பது எந்த வகையிலும் நியாயமற்றதும், அநீதியானதுமாகும்.

தில்லி உச்ச நீதிமன்றம், சாரத்தில் அரசின், ஆதிக்கச் சக்திகளின் ஒரு முக்கிய கைக் கருவியாகும். இது தன் சனநாயக தோற்றத்தையும், சுயேச்சைத் தன்மை கொண்டதான நிலைப்பாட்டையும் வெளிப்படுத்திக் கொள்ள சில கிரிமினல் வழக்குகளில் நீதியை வழங்குவதாகத் தோற்றமளித்தாலும், சமூக நீதியை வழங்குவதற்கான பிரச்சினைகளில் இது பெரும்பாலும், எதிராகவே உள்ளது. அல்லது சாதாரண ஆயம் சில நியாயங்களை வழங்கினாலும் அரசமைப்புச் சட்ட ஆயம் இந்த நியாயங்களை வழங்க மறுக்கிறது.

ஏற்கெனவே மண்டல் குழுவின் பரிந்துரைகளுக்கு எதிராக, இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது என்று கூறிய உச்ச நீதி மன்றம்; தமிழ்நாட்டு நில உச்ச வரம்புச் சட்டத்தையும் எந்த சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கிற சட்டத்தையும் கிடப்பில் போட்டு வைத்துள்ள உச்ச நீதிமன்றம் தான் தற்போது 'உயர்தனிக் கல்வியிலும்', மிக 'உயர் பதவிகளிலும்' இட ஒதுக்கீடு கூடாது என்று தீர்ப்பளித்துள்ளது.

இந்திய சமூக அமைப்பே வருணாசிரம, சாதியக் கட்டமைப்பைக் கொண்ட சிக்கலானதொரு சமூக அமைப்பு. இதை பொத்தாம் பொதுவான சமத்துவ நோக்கோடு அணுகுவது சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வைக் களைய உதவாது. மாறாக எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

இதனால்தான் இந்திய அரசமைப்புச் சட்ட உருவாக்க காலத்திலேயே பிரிவுகள் 330,332,335க்களில் முறையே நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கும் மற்றும் வேலைவாய்ப்பிற்கும் வகை செய்தது.

அதே போல பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்காக கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களில் இடஒதுக்கீட்டிற்கு நிலையான உத்திரவாதம் செய்ய முதல்



படிப்பகம்

www.padippakam.com

சட்டத்திருத்தம் 1951ல் பிரிவு 15ல் உட்பிரிவு 4ஐ சேர்த்ததும், அவ்வுரிமையை அடிப்படை உரிமையாக்கியதும் பிறகு பிரிவு 16க்கு உட்பிரிவுகளைச் சேர்த்து சமத்துவத்திற்கு விளக்கமளித்ததும் கவனத்திற்குரியவை.

எனில் இட ஒதுக்கீட்டின் எதிர்ப்பாளர்கள் பலர், இந்திய அரசமைப்புச் சட்டம் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பிரிவு 16ஐயே காரணம் காட்டி இட ஒதுக்கீட்டிற்கு எதிராக வாதாடுவதும், வழக்காடுவதும் அவ்வப்போது நேர்ந்து வருகிறது.

இந்நிலையில், இடஒதுக்கீட்டிற்கு இடர்ப்பாடு நேராமலும், சமத்துவத்திற்கு குந்தகம் விளையாமலும் இந்திய சமூகத்தில் நிலவும் அசமத்துவத்தைப் போக்கவே இடஒதுக்கீடு, இந்த இட ஒதுக்கீட்டை அங்கீகரித்ததாகவே சமத்துவக் கோட்பாடு நிலவ வேண்டும் என்கிறவகையில் அதாவது இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமத்துவ உரிமையை இந்திய சமூகக் கட்டமைப்போடு பொருத்தி அதற்கொப்பவே நீதியின் செயல்பாட்டை நோக்க வேண்டும் என்கிற புரிதலில் தீர்ப்பளித்த நீதிபதிகள் ஒரு சிலரே.

ஒய்வு பெற்ற முன்னாள் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர், நீதிபதி சின்னப்பரெட்டி போன்றோரே இடஒதுக்கீட்டிற்கு ஆதரவான இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சமூக நீதியை உறுதிப்படுத்தக் கூடிய தீர்ப்புக்களை வழங்கியுள்ளனர்.

இதில் இவர்கள் வழங்கிய தீர்ப்பை விடவும் இத்தீர்ப்பு முடிவிற்கு இவர்கள் வருவதற்கான நோக்கு நிலை பற்றிய கருத்து மிக முக்கியமானது. மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து சிந்தையில் இருத்தத் தக்கது.

நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் முன் 1981 ம் ஆண்டு இந்தியத் தொடர் வண்டித் தொழிலாளர்களது பணி நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிராக வந்த வழக்கு ஒன்றில் அளித்த தீர்ப்புக்கான நோக்குரை என்பது சிறப்பு மிக்கது. பொருள் பொதிந்தது.

இந்திய அரசமைப்புச் சட்டம் குறித்து அரசியல் நிர்ணய அவையில் டாக்டர் அம்பேத்கர் நிகழ்த்திய இறுதிப் பேருரையில் அவர் குறிப்பிட்ட "நாம் நமது அரசியல் சனநாயகத்தை ஒரு சமுதாய சனநாயகமாக ஆக்கிடவும் வேண்டும். அரசியல் சனநாயகத்தால் அடித்தளமாகிய சமூக சனநாயகம் இல்லாது போனால் அந்த அரசியல் சனநாயகம் நீடிக்க முடியாது" என்கிற கூற்றை மேற்கோள் காட்டி வி. ஆர். கிருஷ்ணய்யர் சொல்லுவார்:

"சட்டப் பிரச்சினைகளை நோக்குகையில் சட்டம் தனித்துச் செயல்பட முடியாது. அது சமூகவியல் விதியாட்சிகளது மொத்தத்தின் ஒரு அங்கமாக செயல்பட்டாக வேண்டும், என்கிற அடிப்படையை மறந்து விடக் கூடாது."

அதாவது சட்டம் சட்டத்திற்காகவே அல்ல. அது சமூகத்துக்காக, மக்களுக்காக என்பதே இதன் பொருள்.

எனவே இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமத்துவம் தொடர்பான பிரிவுகளை இந்திய சமூக அமைப்பு சார்ந்தே புரிந்து கொள்ள வேண்டும். விளக்க வேண்டும்.

இந்தப் புரிதலில் நோக்க, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சமத்துவத்தை உறுதி செய்யும் பிரிவு 16 ஐயும் அதன் உட்பிரிவுகளையும் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகவும் ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாகவும் விளக்கமளித்து வழங்கியுள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் உண்மை நிலைபுரியும். அதன் ஆதிக்க நோக்கம் வெளிப்படும்.

இது மீண்டும் மீண்டும் சமத்துவம் என்பதன் பேரால், சமூக அமைப்பிலுள்ள அசமத்துவத்தை நியாயப்படுத்துவதோடு, இந்த அசமத்துவத்தைப் போக்க மாநிலங்கள் மேற்கொள்ளும் முன் முயற்சிகளுக்கும் முட்டுக் கட்டைபோட்டு மாநில விவகாரங்களில் தலையிட்டு அதன் உரிமையைப் பறிப்பதும் ஆகும்.

இது சன நாயகத்திற்கும், சமத்துவத்திற்கும், சமூக நீதிக்கும் எதிரான போக்காகும். எனவே சனநாயக சமத்துவ நோக்குடைய, சமூக நீதிக்கு போராடக் கூடிய சக்திகள் இது குறித்து எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். இது குறித்து சரியான புரிதலை ஏற்படுத்தி, இப்படிப்பட்ட போக்குகளை எதிர்த்து விடாப்பிடியாகப் போராட மக்களை அணி திரட்ட வேண்டும்.☆

## 'அயர்லாந்து விடுதலைப் போராட்டம்'

கட்டுரை ஆசிரியர் தோழர் எஸ்.வி.இராச துரை இங்கிலாந்து (அயர்லாந்து உள்ளிட்டு) நாட்டுக்குச் சென்று அண்மையில்தான் திரும்பியுள்ளார். எனவே, அயர்லாந்து விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும். வாசகர்கள் பொறுத்தருள்க.

(ஆ-ர்)

## *மணமக்களுக்கு வாழ்த்துக்கள்*

**தமிழக இளைஞர் முன்னணியின் தஞ்சை மாவட்டத் தலைவர் தோழர் ரெ. சிவராகவுக்கும் கிளாமங்கலம் வடக்கு நினைவில் நிற்கும் திரு. இராமலிங்கம் - சரோஜா இவர்களின் மகள் செல்வி அமுதாராணிக்கும் இல்வாழ்க்கை ஒப்பந்தம் 8.9.99 அன்று ஒரத்தநாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் இராசேந்திர சோழன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதிக்கு ரூ.250/- வழங்கப்பட்டது.**

**மணமக்களுக்கு வாழ்த்துக்கள்.**

## பான்பராக்கை தடை செய்!

**சென்னை கோத்தாரி நிறுவனத்தில் முற்றுகை.**
**டிசம்பர் 9 - தமிழக இளைஞர் முன்னணி**




படிப்பகம்

www.padippakam.com

# வாக்குப் பதிவு விளக்குவது என்ன?

**- கி. வெங்கட்ராமன்**

நடந்து முடிந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குப் பதிவு விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது. 1998 - ஆம் ஆண்டுத் தேர்தலை ஒப்பிட தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு 4% குறைந்து விட்டது ( காண்க : '*தினமணி*' 14.9.99) பெரும்பாலான மாநிலங்களிலும் இதே போக்கு காணப்படுகிறது. தமிழ்நாட்டில் பதிவான சுமார் 60% வாக்கை முக்கிய மூன்று கூட்டணிகள் பிரித்துக் கொள்ளும். ஆனால் இக் கூட்டணிக்கு விழுந்த வாக்குகள் மொத்த வாக்காளர்களில் மிகக் குறைவு.



இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களைவிட இந்த முறை வாக்களிப்பை வலியுறுத்தும் பிரச்சாரங்கள் அதிகமாகவே நடந்தன. வாக்களிப்பதும், வாக்களிக்க மறுப்பதும் வாக்காளருக்குள்ள உரிமை என்ற உண்மை நிலையை மறைத்து அரசும், பத்திரிகைகளும் தீவிரப் பிரச்சாரம் செய்தன. "வாக்களிப்பது உங்கள் கடமை" "அளிக்க மறுக்கும் ஓட்டு "வைக்கும் ஜனநாயகத்திற்கும் வேட்டு" இருப்பதற்குள் நல்ல வேட்பாளரைத் தேர்ந்தெடுங்கள்" என்பன போன்ற பிரச்சார முழக்கங்களை அரசு நாள் தோறும் வானொலி,தொலைக்காட்சி வாயிலாகப் பரப்பி வந்தது. சுழற்சங்கம், நுகர்வோர் அமைப்பு, எக்ஸ்னோரோ போன்ற சேவை அமைப்புகளும், பத்திரிகைகளும் இப்பிரச்சார இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டன. தமிழ்நாட்டில் இத் தேர்தலில், இதுவரையில்லாத அளவுக்கு மிக அதிக எண்ணிக்கையில் 'கள்ளவாக்குகள்' போடப்பட்டன. வாக்களிக்காமல் இருந்தால் 'குடும்ப அட்டை பறிபோய்விடும்' 'நாட்டுக் குடிமகன்/ மகளாகவே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்' என்பன போன்ற தப்பெண்ணங்களால் பயந்து வலிந்து வாக்களித்தவர்கள் பலர். இத்தனைக்குப் பிறகும் வாக்குப் பதிவு விகிதம் குறைந்துள்ளது கவனிக்கத் தக்கது.

கிராமங்கள் நகரங்கள் இரண்டிலுமே வாக்குப் பதிவு குறைந்திருந்தாலும் கிராமங்களை ஒப்பிட, நகரங்களில் வாக்குப் பதிவு அதிகமாகக் குறைந்துள்ளது. நகர்ப்புற மக்களிடையே நிலவும் நுகர்வுப் பண்பாடு காரணமாக, தேர்தல் நாளை ஒரு விடுமுறை நாளாக அனுபவிக்க விரும்புகிறார்களேயன்றி, வெளியில் வந்து வாக்குப் போட முன் வருவதில்லை என்பது இதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது. இதில் ஓரளவு உண்மையிருந்தாலும், இது முதன்மையான காரணமன்று.

சென்றத் தேர்தல்களில் வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்த உயர் நடுத்தர வர்க்கத்தினர் இந்தத் தேர்தலில் அதிக அளவில் வாக்களித்திருப்பது வாக்குப் பதிவு ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது. சுயநல நுகர்வுப் பண்பாடே வாக்குப் பதிவுக் குறைவுக்குக் காரணம் என்ற வாதத்தை மறுப்பதாக இந்த விவரம் உள்ளது. ஏனெனில் நுகர்வுப் பண்பாட்டிற்கு அதிகம் ஆளாகி இருப்பவர்கள் இப்பிரிவு மக்களே ஆவர். இவர்கள் அதிக அளவில் வாக்களித்துள்ளனர். கீழ்நடுத்தர வர்க்கத்தினரும், அன்றாடங் காய்ச்சிகளுமே இத் தேர்தலைப் புறக்கணித்த மக்களில் அதிகம் பேர் ஆவர். ஆலைத் தொழிலாளர்களும், சிறுவியாபாரிகளும் நிறைந்த வடசென்னைத் தொகுதியில் இரண்டு தொழிற்சங்கத் தலைவர்கள் போட்டியிட்ட போதும் வாக்குப் பதிவு 43.8% - ஆக வரலாறு காணாத அளவு குறைந்துள்ளது இதற்கொரு எடுத்துக்காட்டு.

கொள்கை நோக்கை முன்வைக்காத நாற்காலி அரசியலில் மக்கள் வெறுப்படைந்துள்ளதே வாக்குப் பதிவு குறைந்துள்ளதற்கு முதன்மையான காரணம் ஆகும். தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி கடந்த பல தேர்தல்களிலும் 'வாக்குப் புறக்கணிப்பு' இயக்கங்கள் நடத்தியிருக்கிறது. ஆயினும் இந்தத் தேர்தலின் போது "யாருக்கும் வெட்கமில்லை எவருக்கும் நம் வாக்கில்லை" என்ற த.தே.பொ.க. பிரச்சாரக் கூட்டங்கள் மக்களை ஈர்த்த வெற்றிகரமான கூட்டங்களாக அமைந்தன. இது மக்களின் உணர்வு நிலைக்கு ஒரு அளவு கோலாகும். வாக்குச் சீட்டில் சின்னங்களுக்கு இடம் ஒதுக்குவது போல், யாருக்கும் வாக்கில்லை என்பதற்கு ஒரு கட்டம் அச்சடிக்க வேண்டும் என்ற கோரிக்கை பத்திரிக்கைகள் வாயிலாக எழுந்ததும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குப் பதிவு குறைந்து கொண்டே வருவது, வளரும் போக்காகவே உள்ளது. இந்தத் தேர்தலில் இப்போக்கு முன்னைவிட தீவிரப்பட்டுள்ளது.

நாற்காலிக் கட்சிகளிடத்தில் வெறுப்படைந்துள்ள மக்கள் மாற்றுப் பாதைகளைத் தேடுவார்கள் என்பதே இதன் பொருள் நாற்காலி அரசியலால் நிறைவு செய்ய முடியாத அந்த இடத்தை எது நிரப்புவது என்பதே நம்முன் உள்ள கேள்வி. புரட்சிகர அரசியல், தமிழ்த் தேசிய அரசியல் அந்த இடத்தை நிறைவு செய்தால்தான் வரலாற்றை முற்போக்கான திசைக்கு இட்டுச் செல்ல முடியும். அல்லாது போனால், அந்த வெற்றிடத்தை மத வெறி அமைப்புகள், சாதி சங்கங்கள் ஆகிய பிற்போக்கு அமைப்புகள் கைப்பற்றிக் கொள்ளும். சாதி, மத அமைப்புகள் தொடக்கத்தில் தீவிரத்தன்மைகளைக் காட்டிக் கொண்டாலும், இறுதியில் நாற்காலிக் கூட்டணிகளுக்குள்ளேயே விழுந்துவிடும்.

இந்தத் தேர்தலில் வாக்குப் பதிவு கொடுக்கும் படிப்பினை இதுதான்: நாற்காலி அரசியல் பற்றிய விழிப்பு மக்களிடம் விரிவடைந்துள்ளது. இதனைச் செயலூக்கமுள்ள விழிப்புணர்வாக வளர்த்தெடுப்பது அவசியம். அதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

தீண்டாமை, சாதியக் கொடுமை, பெண்ணடிமை, சுற்றுச் சூழல் சிக்கல் முதலிய அனைத்து முனைகளிலும் ஒடுக்குமுறைகளை எதிர்த்து போராடி கொண்டே அந்த ஜனநாயக அடிப்படையில் தமிழ்த் தேசிய அரசியலை - புரட்சிகர அரசியலை முன்னெடுத்துச் செல்வதே இதற்குள்ள வழி. *



படிப்பகம்

# "காவிரி நீர் உரிமையைக் காட்டிக் கொடுக்கும் மோசடி ஒப்பந்தத்தை ரத்து செய்" என்ற முழக்கத்தோடு தஞ்சையில் விவசாயிகள் மண்வெட்டி ஊர்வலம்

பிரதமர் வாஜ்பேய் முன்னிலையில் சென்ற ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கருணாநிதி - பட்டீல் ஒப்பந்தம்



தமிழகத்தின் காவிரி உரிமையைப் பலியிடும் கானல் நீர் ஒப்பந்தம் என்பதால், அவ்வொப்பந்தத்தை ரத்து செய்யுமாறு தமிழக அரசைக் கோரி தஞ்சையில் 24.9.99 அன்று த.தே.பொ.க. சார்பில் விவசாயிகளின் மண்வெட்டி ஊர்வலம் நடைபெற்றது. காவிரிநீர் தராத கர்நாடகத்திற்கு நெய்வேலி மின்சாரத்தை நிறுத்துமாறும், கர்நாடகத்திற்கு எதிராக தமிழகம் பொருளாதாரத் தடை விதிக்குமாறும், காவிரி நீர் பெற்றுத் தராத தில்லி அரசு நரிமணம் பெட்ரோலை எடுக்கக் கூடாது என்றும் வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. உடனடியாக நடுவர் மன்றத் தீர்ப்புப் படி தண்ணீரைத் திறந்து விடும்படி கர்நாடகத்தை ஊர்வலத்தினர் வலியுறுத்தினர்.

மண்வெட்டி ஊர்வலத்திற்கு தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் க. பழநிமாணிக்கம் தலைமை தாங்கினார். ஊர்வலம் பொதுப் பணித்துறை காவேரிக் கோட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுலக வாயிலிலிருந்து புறப்பட்டது. த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கி. வெங்கட்ராமன் விளக்கவுரையாற்றி ஊர்வலத்தைத் தொடக்கி வைத்தார்.

காந்தி சாலை வழியாகச் சென்ற எழுச்சிமிகு ஊர்வலம் பழைய பேருந்து நிலையம் அருகில் முடிவடைந்தது. ஊர்வலத்தில் விவசாயிகள் சட்டை அணியாமல் அரை நிர்வாணமாக, தலையில் முண்டாசு கட்டி, தோளில் மண்வெட்டியைச் சுமந்து கோபம் கொப்பளிக்க முழக்கம் எழுப்பியது மக்களின் கவனத்தை ஈர்த்தது. விவசாயிகளுக்கு ஆதரவாக மாணவர்களும் ஊர்வலத்தில் அணிவகுத்தனர்.

ஊர்வலத்தின் முகப்பில் தாரை தப்பட்டை முழங்க காவிரி ஒப்பந்தம் என்ற அட்டையைக் கழுத்தில் சுமந்தபடி கழுதை ஒன்று வந்தது. கழுதை வாயில் வாஜ்பாய் - கலைஞர் ஒப்பந்தம் இருப்பதைச் சித்திரிக்கும் கேலிச் சித்திரம் தாங்கிய தட்டி ஏந்தியபடி தோழர்கள் இருவர் ஊர்வலத்தின் முன்னே நடந்து வந்தனர். தமிழக மாணவர் முன்னணி தோழர் ஜானகிராமன் இச்சித்திரத்தை வரைந்திருந்தார்.

மண்வெட்டி ஊர்வலத்தை முடித்து வைத்து பழையபேருந்து நிலையம் எதிரில் த.தே.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் உணர்ச்சி மிகு உரை நிகழ்த்தினார்.

தோழர் பழ. இராசேந்திரன் (தஞ்சை நகரச் செயலாளர், த.தே.பொ.க.) நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# சித்த மருத்துவம் சந்திக்கும் நெருக்கடிகள்

- வை. கு. கோபாலன்

(கட்டுரையாளர், தமிழ்நாடு சிறு தொழில் சித்த மருந்து உற்பத்தியாளர்கள் சங்கப் பொருளாளர், மதுரை.)

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பறைசாற்றிய தமிழ், தனக்கு மட்டுமே என்று எதையும் என்றைக்கும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் தமிழரால் படைக்கப்பட்ட பலவும் பார் முழுதும் பரவியும் கூட அவற்றை உருவாக்கியவன் தமிழன் என்று அறியாமல் இருக்கின்றனர் தமிழர்.

தமிழில் அறிவியல் துறைகள் சிறப்புப் பெற்றிருந்த காலம் இருந்தது. அவற்றில் வானியல், கணிதவியல், உழவியல், மருத்துவம் என பல இருந்தன. வானியலும், கணிதவியலும் இணைந்து சோதிடவியலாக பதஞ்சலி சித்தர் மூலம் வெளிப்பட்டது. உழவியலும், சித்த மருத்துவமும் சமூகத்தில் உற்பத்தியின் தேவை கருதி கால்நடை மருத்துவமாகவும் வளர்ந்தது. சித்த மருத்துவம், வாழ்வியல், சமூகவியல், மருந்தியல், கனிமவியல், தாவரவியல், வேதியியல் மற்றும் உடற்கூறியலாக மலர்ந்திருந்தது.

மருத்துவ அறிவியலில் இந்திய மண்ணில் சித்த மருத்துவம் மிகத் தொன்மை வாய்ந்தது. சித்த மருத்துவ முறையில் பல்வேறு கனிமங்கள், அவைகளின் தன்மைக்கேற்றவாறு பல மூலிகைகளின் சாறு அல்லது குடிநீர்களில் சுத்தம் செய்யப்பட்டும், அவற்றைக் கலந்து அரைத்தும், புடம் போடுதல் என்ற வெப்பநிலை மாற்றத்தால், வேதியியல் மாற்றம் நிகழ்த்தியும் மருந்தாக்கப்படுகின்றன. இம்முறை பற்ப செந்தூரங்கள், ஆயுர்வேத, யுனானி முறைகளிலும் உண்டு.

இம்மூன்று முறைகளிலும் உள்ள செய்முறைகளில் சித்த மருத்துவச் செய்முறை சிறப்பானதாக உள்ளது என்பது செர்மன் நாட்டு அறிவியலாளர்களின் கருத்தாகும். கிடைப்பதற்கரிய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் செர்மனியில் உள்ளன என்றும் அவற்றை நம் நாட்டுக்குத் திரும்ப எடுத்து வரவேண்டும் என்றும் அண்மையில் ஒரு ஆங்கில நாளேடு கூட குறிப்பிட்டிருந்தது.

ஆயுர்வேத, யுனானி முறைகளில் உள்ள பற்ப செந்தூரங்களின் எண்ணிக்கையை விடச் சித்த முறையில் உள்ள பற்ப செந்தூரங்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகம். ஒரே கனிமத்தைச் செந்தூரமாக்க ஒரு சித்தரே பல செய்முறைகளைக் கூறியிருக்கிறார். மற்ற பல சித்தர்கள் அதே கனிமத்தை செந்தூரமாக்க மேலும் பல்வேறு முறைகளைக் குறிப்பிட்டுள்ளனர். கலப்பு மருந்தாகப் பல பாடாணங்கள் (பாஷாணங்கள்) குறிப்பிடப்பட்டுள்ளன. சித்த மருத்துவத்தில் ஒன்பது பாடாணங்களையும் பற்ப செந்தூரமாக்கும் செய்முறைகள் உள்ளன. நஞ்சு என்று கருதப்படும் பாடாணங்களில் 'வீரம்' என்ற பாடாணம் தவிர்த்து வேறு எந்த பாடாணத்தையும் ஆயுர் வேத யுனானி முறைகளில் செந்தூரமாக்கும் செய்முறை குறிப்பிடப்படவில்லை.

பற்ப செந்தூரங்கள் முறையாக செய்யப்படவில்லை எனில் கொடிய நஞ்சாக மாறும் என்பதே இதற்குக் காரணம். இவ்வகையில் முறையாகச் செய்யப்படாத மருந்துகளால் மனித உயிரைச் சோதனைக்குள்ளாக்குவதை தவிர்க்கும் பொருட்டு ஆயுர்வேத, யுனானி மருத்துவர்கள் அச்செய்முறைகளைக் குறைத்திருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. இதைப் போன்றே மூலிகைச் சாறுகளும் குடிநீர் எனும் கசாயங்களும் சித்த மருத்துவத்தில் தேவைப்படும் போது மட்டுமே செய்து கொள்ள முடியும். அவைகளைப் பதப்படுத்தி சேமித்து வைக்கும் வகையில் ஆசவம், அரிட்டம் போன்ற புதிய செய்முறைகள் ஆயுர்வேதத்தின் வளர்ச்சியாக அமைந்துள்ளது. அதே போன்று யுனானி செய்முறைகளில் உயிர் மருந்துகள் (Bio Medicines) அதிகமாக இடம் பெற்றுள்ளன. சித்த மருத்துவத்தில் உயிர் மருந்துகள் மிகக்குறைவே.

இவ் அடிப்படையில் நோக்கும் போது சித்த மருத்துவத்தில் இருந்து ஆயுர்வேத யுனானி செய்முறைகள் வளர்ச்சி அடைந்திருக்கலாம் என்ற ஆய்வாளர்களின் கருத்து வலுப்பெறுகிறது.

இப்படிப்பட்ட தொன்மை வாய்ந்த சித்த மருத்துவம் தமிழர்களின் அக்கறையின்மையாலும் (அலட்சியமும், மெத்தனப்போக்கும்) இன்று சிறப்பை இழந்து சீரழிந்து வருகிறது என்று தினமணி நாளிதழ் பலமுறை தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. (தினமணி நாளிதழ்கள் நாள் 9.8.95, 6.6.96, 9.3.98, 10.11.98)

ஆயுர் வேத மருத்துவமுறை சமஸ்கிருதத்தையும், யுனானி மருத்துவமுறை உருது மற்றும் அரபு மொழியையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவை சார்ந்திருக்கும் மொழியையும் இனத்தையும் அடிப்படையாகக் கொண்டு அவை வளர்ச்சி அடைந்துள்ளன. அவைகளுக்கு இணையாகச் சித்த மருத்துவம் வளர்ச்சி அடையவில்லை.

கல்கத்தாவில் நடைபெற்ற திரைப்பட விழாவிற்கு மிருணாள்சென் என்ற வங்காள இயக்குநர் தான் தலைவராக வீற்றிருக்க வேண்டும். தமிழராகப் பிறந்த சிவாஜி தலைமையேற்கக் கூடாது என்று கூறி அதையே சாதிக்கவும் செய்தனர், வங்காளத் திரைப்படத் துறையினர். கர்நாடக மாநிலத்தில் உள்ள மத்திய அரசின் கணக்குத் தணிக்கை



படிப்பகம்

www.padippakam.com

அலுவலகங்களில் கன்னடம் கற்றவர்களே பணியாற்ற வேண்டும் என்ற கன்னடர்களின் இன உணர்வு இருக்க, அது போன்ற இன உணர்வு' கடுகளவும் இல்லாத தமிழினத்தைச் சார்ந்து இருப்பதாலேயே இந்திய மருத்துவ முறைகளுக்கு ஆணி வேரான சித்த மருத்துவம் வேரில் பழுத்த பலாவாகக் கோரிக்கையற்றுக் கிடக்கிறது.

இந்தியாவிலேயே தமிழக அரசு மட்டுமே சென்னையில் இந்திய மருத்துவ முறைகளுக்கான மருத்துவமனை அமைத்து அதில் ஆயுர்வேத, யுனானி, ஓமியோபதி மருத்துவர்களைப் பணி அமர்த்தியுள்ளது. கேரளத்தில் மட்டுமே 12 சித்த மருத்துவப் பட்டதாரிகளை அரசு மருத்துவ அலுவலராக கேரள அரசு பணியில் அமர்த்தியுள்ளது.

வேறு எந்த ஒரு மாநில அரசும் பட்டதாரி சித்த மருத்துவர்களைத் தனது அரசு மருத்துவமனைகளில் பணி அமர்த்தியதில்லை.

சித்த மருத்துவத்திற்கென்று இரு கல்லூரிகளே தமிழகத்தில் உள்ளன. ஆனால் ஆயுர்வேத முறைக்கு தமிழகத்தில் தனியார் கல்லூரிகள் மூன்று உள்ளன. யுனானி மருத்துவ முறைக்கு சென்னை அரசு கல்லூரி ஒன்றும் உள்ளது. இந்நிலையில் ஆயுர்வேத, யுனானி பட்டதாரி மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகமானால் தமிழ்நாட்டில் அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கவேண்டிய கடமை தமிழக அரசுக்கு உள்ளது. தமிழ் நாட்டு கிராமப்புற மருத்துவமனைகளில் ஆயுர்வேத மருத்துவர்களை பணி அமர்த்த இருக்கும் அரசின் திட்டத்தை தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அண்மையில் அறிக்கையாக வெளியிட்டுள்ளார். இது பிச்சை எடுத்தானாம் ஆண்டி, அதை பிடுங்கி ஓடினானாம் பேராண்டி என்பது போலத்தான் இருக்கிறது.

சித்த மருத்துவ பட்டதாரிகளில் ஆயிரக்கணக்கானவர் வேலையின்மையால் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களுக்குச் சரியான பாடத் திட்டமின்மையால் சுயமாகத் தொழில் (Private Practice) செய்யும் தன்னம்பிக்கையற்று இருக்கிறார்கள். மேலும் அவர்கள் சுயமாகத் தொழில் செய்வதெனில் போதுமான சித்த மருந்துகள் தயார் நிலையில் இல்லை. அதாவது மருத்துச் சந்தையில் அல்லோபதி, ஆயுர்வேத மருந்துகளுடன் ஒப்பிடும் அளவுக்கு சித்த மருந்துகள் (Patent Medicine) அதிக எண்ணிக்கையில் இல்லை. மரபு முறை மருந்துகளை (இளகங்கள், தைலம், பற்ப செந்தூரங்கள், மாத்திரைகள், சூரணங்கள்) உற்பத்தி செய்யும் அடையாறு கூட்டுறவு மருந்து உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனமும் (IMCOPS), தமிழ் நாடு அரசின் மூலிகை வளர்ச்சிக் கழகமும் (TAMPCOL) கூட அரசு மருத்துவமனைகளின் மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன.

சித்த மருந்துகளின் தட்டுப்பாட்டிற்குக் காரணம் போதிய மருந்து உற்பத்தி செய்சாலைகள் இன்மையே. அதைக் களையும் வண்ணம் தொழில் முனைவர்கள் சித்த மருந்து உற்பத்தியில் ஈடுபட விருப்பம் காட்டுவதில்லை. ஏனெனில் அல்லோபதி அல்லது ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி செய்தால் இந்தியா முழுதும் விற்பனைக்கான சந்தை உள்ளது. சித்த மருந்துகளை உற்பத்தி செய்தால் தமிழ் நாட்டைத் தவிர வேறு எங்கும் எடுத்துச் சென்று கடைபரப்பி விற்பனை செய்ய முடியாது. சித்த மருத்துவமும், சித்த மருந்துகளின் விற்பனையும் பரவிப் பெருக வேண்டும் எனில் ஏனைய மாநிலங்களும் சித்த மருத்துவப் பட்டதாரிகளைப் பணியில் அமர்த்த வேண்டும். தமிழக அரசு மட்டுமே யுனானி, ஆயுர்வேத மருத்துவர்களைப் பணிக்கு அமர்த்தி முன் உதாரணமாகத் திகழ்கிறது. ஏனைய மாநில அரசுகள் சித்த மருத்துவப் பட்டதாரிகளைப் பணியில் அமர்த்தினால் அவர்களுக்குத் தேவைப்படும் மருந்துகளை உற்பத்தி செய்ய மருந்து செய்யும் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டு தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகும். மாறாக மருந்து உற்பத்திச் சாலைகள் ஏனைய மாநிலங்களில் துவங்கப்பட்டாலும் அம்மருந்து செய் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலராகப் பட்டதாரி சித்த மருத்துவர்களுக்கு அம்மாநிலங்களில் வேலை வாய்ப்புக் கிடைக்கும். 'தமிழுக்கு மட்டுமே அல்ல சித்தம்' எனபதும் நடைமுறைக்கு வந்து சித்தம் வளப்படும், வலுப்பெறும்.

மற்றொரு வகையிலும் சித்த மருந்து உற்பத்தி வளர்ச்சியடைய வாய்ப்பிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள சித்த மருத்துவர்கள் முடிந்த வரையில் சித்த மருந்துகள் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் இந்திய மருத்துவ முறை என்ற நோக்கில் ஆயுர்வேத மருந்துகளைப் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. சித்த மருத்துவ முறையில் கிடைக்காத மருந்துகளை மாற்று இந்திய மருத்துவமுறைகளிலிருந்து பெற்றுக் கொள்வதில் தவறில்லை. இதேவழியில் அலோபதி மருத்துவர்களும் மாற்று மருத்துவ முறை மருந்துகளைப் பரிந்துரை செய்யும் போது சித்த மருந்துகளுக்கு முதலிடம் அளிக்கலாம். இவ்வகை செயல்பாடு சமூகப் பொறுப்புணர்வு இருந்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

மருந்துச் சந்தையில் போதிய தரமான சித்த மருந்துகள் கிடைப்பதில் சிரமங்கள் இருந்தாலும் கூட இருமல், சளி, கல்லீரல் சீர்கேடு, சூதக சீர்கேடு, மூட்டு வலி, தோல் வியாதிகள், வெண்குட்டம், இரைப்பு, செரியாமை, வாயு, இன்னும் பிற நோய்களுக்கு எண்ணற்ற சித்த மருந்துகள் சந்தையில் கிடைக்கின்றன. ஆனால் சித்த மருத்துவர்களின் 'அக்கரைப் பச்சை' மீதான இச்சை மாற்று மருத்துவ முறைகளை நாடச் செய்கிறது. தமிழ்நாட்டிலுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன மருத்துவமனையில் ஆயுர்வேதப் பிரிவு இயங்குகிறது. அங்கு சித்த மருந்துகளுக்கு இம்மியளவுகூட இடம் கொடுக்க அங்குள்ள அதிகாரிகள் அனுமதிப்பதில்லை. இதுபோன்ற வாய்ப்பு வேறு மாநிலங்களில் சித்த மருத்துவத்திற்கு கிட்டுமா?

## சிதம்பரத்தில் சுவரொட்டிப் பிரச்சாரம்

"காவிரி தராத கர்நாடகத்திற்கு நெய்வேலி மின்சாரம் நிறுத்து" என்ற வாசகம் தாங்கிய சுவரொட்டி ஒட்டி சிதம்பரம் பகுதியில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் பிரச்சாரம் நடைபெற்றது.




படிப்பகம்

www.padippakam.com

# வேதனைகளைக் கடந்து விடுதலை அடையும் கிழக்கு திமோர்

- வடமலை

கிழக்கு திமோர் (East Timore) - ஐநூறு ஆண்டு கால அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு இன்று சுதந்திரத்தின் தலைவாசலில் தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆகஸ்ட் 30 ஆம் நாள் தலையீட்டின் பேரில் இந்தோனேசிய அரசு கிழக்குத் திமோரில் கருத்து வாக்கெடுப்பு நடத்த ஒத்துக் கொண்டது. (விரிவான செய்திகளுக்கு காண்க 'தமிழர் கண்ணோட்டம்' ஏப்ரல் 1999)



**கண்ணுறங்கும்போதும் கத்தியே பாதுகாப்பு...**
**அகதிகள் முகாமில் திமோரியப் பெண்**

ஐ.நா. மேற்பார்வையில் நடந்த கருத்து வாக்கெடுப்பில் கிழக்கு திமோர் மக்களில் 80% பேர் இந்தோனேசியாவின் பிடியிலிருந்து விடுபட்டு தனிச் சுதந்திர நாடாக இருக்க வாக்களித்தனர்.

கிழக்குத் திமோர் 1975 லிருந்து இந்தோனேசியாவின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. அதற்கு முன்னர் 400 ஆண்டுகளுக்கும் மேலாக போர்ச்சுக்கல் ஏகாதிபத்தியம் கிழக்குத் திமோரை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தது. கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக திமோரியர்கள் தன்னந்தனியே வேறு எந்த நாட்டின் உதவியும் இன்றி இந்தோனேசிய ஆதிக்கத்திற்கு எதிராக் விடுதலைப் போராட்டம் நடத்தி வந்தனர். இறுதியில் ஐ.நா.

"இந்தோனேசியாவுக்குள் சுயாட்சியா? அல்லது இந்தோனேசியாவிலிருந்து சுதந்திரமா" என்ற கேள்வி கிழக்குத் திமோர் மக்கள் முன்னால் வைக்கப்பட்டு கருத்து வாக்கெடுப்பு நடந்தது. முதலில் இவ்வாக்கெடுப்பு ஜூலை மாதத்தில் நடத்தப்படுவதாக இருந்தது. இந்தோனேசிய இராணுவமும், இராணுவத்தால் உருவாக்கப்பட்ட ஆயுதக் குழுக்களும் கலவரத்தில் ஈடுபட்டு திமோரியர்களை நூற்றுக் கணக்கில் கொன்றனர். பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டதால் ஐ.நா. பொதுச் செயலாளர் கோஃபி அன்னான் கருத்து வாக்கெடுப்பைத் தள்ளி வைத்தார். ஆகஸ்ட் 30ல் கருத்து வாக்கெடுப்பு நடைபெற்றது.

கிழக்குத் திமோர மக்களில் 4.5 இலட்சம் பேர் தகுதியுள்ள



படிப்பகம்

www.padippakam.com

வாக்காளர்கள் என கணக்கிடப்பட்டது. இவர்களில் 80% பேர் சுதந்திர கிழக்குத் திமோர் வேண்டுமென வாக்களித்தனர் திமோரிய இனத்தவர் கிழக்குத் திமோர் மக்கள் தொகையில் சுமார் 80% என்பது குறிப்பிடத்தக்கது (இந்தோனேசியர் 20% பேர் ஆவர்) அதாவது திமோரியர்கள் அனைவருமே சுதந்திரம் கோரி வாக்களித்துள்ளனர் எனக் கொள்ளலாம்.

கருத்துவாக்கெடுப்பு முடிவை ஐ.நா. அறிவித்தவுடனேயே இந்தோனேசியக் காடையர்கள் வன்முறையில் இறங்கினர். திமோரியர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன; பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கிழக்குத் திமோர் தலைநகர் டிலி (Dili) கொலைக்களமாக மாறியது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இரண்டு இலட்சம் மக்கள் கிழக்குத் திமோர் காடுகளுக்கு ஓடிப் பதுங்கினர். ஒரு இலட்சம் திமோர் மக்கள் கப்பல் ஏறி ஆஸ்திரேலிய, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு அகதிகளாகப் புலம் பெயர்ந்தனர்.

ஐ.நா. நிவாரணக் குழு அலுவலகத்திலும், சர்வதேச செஞ்சிலுவை சங்க வளாகத்திலும், நோபல் பரிசு பெற்ற கத்தோலிக்கப் பாதிரியார் கார்லோஸ்பெலோ (Bishop Corlos Belo) வின் மாளிகையிலும் திமோரியர்கள் உயிருக்குப் பயந்து பதுங்கினர். இந்த இடங்களையும் இந்தோனேசியக் காடையர்களும், இராணுவத்தினரும் குண்டு வீசித் தாக்கினர். பலர் கொல்லப்பட்டனர். ஐ.நா. நிவாரணக் குழுவைச் சேர்ந்த இருவரும் மாண்டனர். ஐ.நா. குழுவினருக்கே பாதுகாப்பில்லை என்ற சூழ்நிலையில் குழுவினரை கிழக்குத் திமோர்லிருந்து விலக்கிக் கொண்டார் கோஃபி அன்னான். பாதிரியார் கார்லோஸ் பெலோவுக்கும் பாதுகாப்பில்லை என்ற சூழலில் அவரும் அகதியாக ஆஸ்திரேலியாவுக்கு புலம் பெயர வேண்டியதாயிற்று.


ஜனான்ா குஸ்மோ

இவ்வளவு இரத்தக் களறி நடந்த பிறகும் அமெரிக்கா இப்பிரச்சினையில் உரிய அக்கறை செலுத்தாமலேயே இருந்தது. இந்தோனேசியா அமெரிக்க ஆதரவு பெற்ற நாடு என்பது கவனிக்கத் தக்கது. இந்தோனேசிய அரசு கிழக்கு திமோர் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்று அமெரிக்க அரசு நம்பிக்கை தெரிவித்துக் கொண்டிருந்தது. கிழக்குத் திமோரில் நடக்கும் இனப் படுகொலை உலகத்தின் மனசாட்சியையே உலுக்கியது. உலகம் முழுதுமிருந்த பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், இணையங்களும் கொசோவோவுக்கு ஒரு நீதி கிழக்கு திமோருக்கு வேறு நீதியா? என்றெல்லாலம் குரல் கொடுக்கத் தொடங்கின. அதன்பிறகு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் அசைந்து கொடுத்தன.

சர்வதேச அமைதிப்படையை 'அழைக்குமாறு' இந்தோனேசிய அரசுக்கு நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டது. ஐ.நா. பாதுகாப்பு மன்றம் இதற்கான தீர்மானம் இயற்றியது. வேறுவழியின்றி இந்தோனேசியக் குடியரசுத் தலைவர் ஹபீபி ஐ.நா. அமைதிப்படை கிழக்குத் திமோருக்கு வருமாறு 'அழைத்தார்.'

ஆஸ்திரேலியத் துறைமுகம் டார்வினிலிருந்து ஆஸ்திரேலிய படைத் தளபதி பீட்டர் காஸ்குரோவ் தலைமையிலான ஐ.நா. அமைதிப்படை செப்டம்பர் 19 புறப்பட்டு, 20-ஆம் தேதி கிழக்குத் திமோர் தலைநகர் டிலியை அடைந்தது. இந்த அமைதிப் படையில் ஆஸ்திரேலியப படையினரே அதிகம். ஆஸ்திரேலியா தவிர நியூசிலாந்து, கனடா, ஜப்பான், பிரிட்டன், சீனா, மலேசியா உள்ளிட்ட 23 நாடுகளின் படைகள் ஐ.நா. அமைதிப்படையில் அடங்கும். அமெரிக்கா படை அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக அமைதிப்படைக்கு வேண்டிய தகவல் தொடர்புப் பணிகளை ஒருங்கிணைக்கிறது.

இந்தியா இச்சிக்கல் பற்றி மூச்சு விடவில்லை. காஷ்மீர் சிக்கலும், கிழக்குத் திமோர் சிக்கலும் ஒத்ததன்மையுள்ளதாக இருப்பதால், கிழக்கு திமோரைப் போல, காஷ்மீரிலும் கருத்து வாக்கெடுப்பு வைத்தாலென்ன என்ற கேள்வி எழுமோ என்ற அச்சம் தில்லி ஆட்சியாளர்களுக்கு இருக்கலாம்.

ஐ.நா. படை போனபிறகு இந்தோனேசிய இராணுவம் கிழக்குத் திமோரை விட்டு படிப்படியாக வெளியேறி வருகிறது.

கிழக்கு திமோர் விடுதலைப் போராட்டத் தலைவர் **ஜனானா குஸ்மோ (Xanana Gusmao)** நீண்ட நாட்களாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். தற்போது விடுதலையாகி, உலக நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார். சுதந்திரக் கிழக்கு திமோரின் குடியரசுத் தலைவராக ஜனானா குஸ்மோவே இருப்பார் என்று நம்பப்படுகிறது.

எல்லா வேதனைகளையும் புறங்கண்டு, இருபத்தோறாம் நூற்றாண்டின் முதல் சுதந்திர நாடாக கிழக்குத் திமோர் மலர இருக்கிறது.

கிழக்குத் திமோர் மக்களுக்கு நமது வாழ்த்துகள் *



படிப்பகம்

www.padippakam.com

# சிதம்பரம் கலவரம்

சிதம்பரம் தொகுதியில் இந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது நடந்த வன்முறை நாடு முழுதும் பலருக்கு அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது.



ஆயிப்பேட்டையில் எரிந்த வீடு

சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் கிட்டத்தட்ட சம அளவில் வன்னியர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்கின்றனர். வன்னியர் - தாழ்த்தப்பட்டோர் பகைமை இங்கு கூர்மையாக உள்ளது. பாட்டாளி மக்கள் கட்சி வன்னியர்களுக்கான அரசியல் அமைப்பாகவும் விடுதலைச் சிறுத்தைகள் தலித்துகளுக்கான அரசியல் அமைப்பாகவும் இங்கு செயல்படுகின்றன.

இந்த தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் த.மா.கா. வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டார். வன்னியர் - தாழ்த்தப்பட்டோர் மோதலை வேகப்படுத்துவதாக இத்தேர்தல் அமைந்தது.

இத்தேர்தலில் பா.ம.க.- விடுதலை சிறுத்தைகளிடையேதான் முதன்மையான போட்டி என்ற அளவிற்கு நிலைமை மாறியது. அனைத்துக் கட்சியையும் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் விடுதலை சிறுத்தைகள் பக்கமும், அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த வன்னியர்களில் பெரும்பாலோர் பா.ம.க. பக்கமும் அணிதிரளக் கூடிய சூழல் உருவானது.

செப்டம்பர் 5- ஆம் தேதி வாக்குப்பதிவு தொடங்கிய சில மணி நேரத்திற்கெல்லாம் பல வாக்குச் சாவடிகளில் -குறிப்பாக கிராமப்புற வாக்குச் சாவடிகளில் பதட்டநிலை ஏற்பட்டது.

கருப்பூர், அம்பாள்புரம், வயலாமூர், வடலூர் ஆர்.சி. காலனி, நொச்சிக்காடு, தியாகவள்ளி, லெனின் காலனி உள்ளிட்ட சுமார் 25 கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை வாக்குப் போடவிடாமல் பா.ம.கவினர் தடுத்து, விரட்டிவிட்டு, ஓட்டு மொத்தமாக கள்ள ஓட்டு போட்டுள்ளனர். அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் உள்ள சில வாக்குச் சாவடிகளில் வன்னியர்கள் வாக்குப் போடாமல் தடுக்கப்பட்டு, அங்கு விடுதலை சிறுத்தைகள் ஒட்டு மொத்தமாக, கள்ள ஓட்டு போட்டுள்ளனர். ஆடூர், அனுக்கம்பட்டு, ஆணையம் பேட்டை, நடுத்திட்டு ஆகியவை இந்த வகையிலானவை.

ஆயினும், தாழ்த்தப்பட்ட மக்களை வாக்குப் போட விடாமல் வன்னியர்கள் தடுத்ததுதான் அதிகம்.

செப்டம்பர் 5 இரவிலிருந்தே தொடர்ந்து கலவரங்கள் வெடித்தன. ஒரு சம்பவம், அதைத் தொடர்ந்து தொடர்ச்சியான மோதல் என்ற வகையில் இக் கலவரம் நடைபெறவில்லை. ஒரே நேரத்தில் பல இடங்களில் கலவரம் வெடித்தது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சமூகத்தினர் கலவரத்தைத் தொடங்கியுள்ளர்.

காட்டுமன்னார்குடி, சேத்தியாத்தோப்பு, ஆயிப்பேட்டை தாதங்குப்பம், நொச்சிக்காடு, நடுத்திட்டு, தியாகவள்ளி முதலான பல இடங்களில் தாழ்த்தப்பட்டோர் குடிசைகள் கொளுத்தப்பட்டன. ஆணையாம் பேட்டை, பண்ணப்பட்டு ஆகிய சில இடங்களில் வன்னியர் வீடுகள் கொளுத்தப்பட்டன. ஆலப்பாக்கத்தில் இருதரப்பு வீடுகளும் எரிக்கப்பட்டதால், கிட்டத்தட்ட அனைத்து வீடுகளுமே சாம்பலாகி விட்டன.

தெற்கு மாங்குடியில் த.தே.பொ.க. தோழர் சௌந்தரராசன் வீடு உள்ளிட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் அனைத்து வீடுகளும் கொள்ளையிடப்பட்டன. தோழர் சௌந்தரராசன்



படிப்பகம்

www.padippakam.com



ஆணையாம் பேட்டையில் எரிந்த வீடு

வீட்டில் இருந்த தொலைக்காட்சி, T.V.S. 50 வண்டி, டேப்ரிக்கார்டர் ஆகியவை அடித்து நொறுக்கப்பட்டன. பீரோ உடைக்கப்பட்டு 8 பவுன் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அதே போல் வேறு சில வீடுகளில் கட்டில் , காற்றாடி போன்றவை உடைக்கப்பட்டுள்ளன.

இரு தரப்பு மோதல் வலுத்ததன் காரணமாக பின்னலூர், சேத்தியாத்தோப்பு, தீர்த்தாம்பாளையம், குமாரகுடி, அம்பாள்புரம் ஆகிய இடங்களில் காவல்துறை வானத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தி, கும்பலைக் கலைத்தது.

இது நாள் வரை பதட்டம் இல்லாத பல கிராமங்களில் கூட திடீர் மோதல் ஏற்பட்டது பலருக்கு வியப்பை அளித்தது. சாதிக் காழ்ப்பு இல்லாத பல பகுதிகளில் தேர்தல் வந்து கலவரத்தை ஏற்படுத்தியது.

இரண்டு தரப்பிலும் மொத்தம் ஒன்பது பேர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான திட்டமிட்டத் தாக்குதல் நடந்த இடங்கள் என்று தெளிவாகத் தெரிந்த இடங்களில் கூட காவல்துறை தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தைப் பயன்படுத்தத் தயங்குகிறது.

குடிசை இழந்தோர்க்கு கொடுக்கப்படும் நட்ட ஈடு ரூ.1000 - 1500 என்று மிகக் குறைவாக உள்ளது. பொருள் இழப்புக்கு நட்ட ஈடு அளிக்கப்பட வில்லை. பலர் வாழ்க்கையில் மிகக் கஷ்டப்பட்டு சிறுகச் சிறுகச் சேர்த்த அத்தனைப் பொருட்களையும் இழந்து விட்டு நிற்கின்றனர். இதையெல்லாம் அரசு கண்டு கொள்ளவில்லை.

எனவே

★ தேர்தல் ஆணையம் நேரில் ஆய்வு செய்து பெருமளவில் கள்ள ஓட்டுப் போட்ட பகுதிகளைக் கண்டறிந்து அந்தச் சாவடிகளில் மறுவாக்குப்பதிவுக்கு ஆணையிட வேண்டும்.

★ எரிந்த வீடுகளுக்கும், இழந்த பொருட்களுக்கும் காப்பீட்டுத் தொகை போல உரிய நட்ட ஈடு வழங்க வேண்டும்.

★ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக திட்டமிட்ட தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களைக் கண்டறிந்து அங்கு தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.



ஆட்சியரிடம் முறையிடுகிறார் தோழர் சௌந்தரராசன் மனைவி

★ கிராம அளவில் அமைதிக் குழுக்களை ஏற்படுத்தி, அவை சரிவர செயல்படுமாறு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

– கி.வெ.



படிப்பகம்


www.padippakam.com

# குறுந்தட்டில் ஒரு குறள் களஞ்சியம்

**- மணிவண்ணன்**

அச்சில் வெளிவந்த / வந்து கொண்டிருக்கும் நூல்களில் பல- பெரும் பாலும் ஆங்கிலத்தில் -தற்போது குறுந்தட்டில் (Compact Disc - CD)வெளியிடப்பட்டு வருகின்றன. அவை பல் தொடர்பு சாதனங்கள் (Multy Media) அடங்கிய கணினிகளில் செலுத்தப்பட்டு படிக்கப்படுகின்றன / அறியப்படுகின்றன. அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பாடநூல்கள், பிரபல் எழுத்தாளர்களின் நூல்கள் பல்வகைப்பட்ட பெரும்புத்தகங்கள் தற்போது சட்டைப்பையை விட சற்றே பெரிய அளவுள்ள, அறிமுக அட்டையை விட சற்றே கனம் அதிகமுள்ள சின்னஞ்சிறு குறுந்தட்டுக்களில் வெளியிடப்படுகின்றன.

இத்தகைய குறுந்தட்டில், நூல்களில் இல்லாத சில கூடுதல் சிறப்பம்சங்கள் உண்டு. அவை, கனமில்லாதது, சிறிய தட்டில் ஏராளமான தகவல்களை உள்ளடக்க முடிகிறது என்பதைத்தவிர, வரிவடிவங்களாக எழுத்துக்களை மட்டுமின்றி படங்கள், சலனப்படங்கள், ஒலி, நிறங்கள் போன்றவற்றையும் சேர்த்துப் பதியவும், அறியவும் முடிகிறது. எடுத்துக்காட்டாக ஒருகலைக்களஞ்சியத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற மனிதரைப்பற்றிய தகவலை எழுத்துக்களாகவும், அவர் தொடர்பான சம்பவத்தை சலனப்படமாகவும், குரல் ஒலியாகவும் அறிந்து கொள்ள முடிகிறது பல்தொடர்பு கணினி (Multy Media Computers) உடையோரே பயன்படுத்த முடியும் என்பது இதன்குறை. நூல்களின் பல்வேறு பகுதிகளையும் அதிகச் சிரமமின்றிபல வகைப்பட்ட எளிய சுவையான வழிகளில் தேடியறிய முடிகிறது.



இத்தகைய குறுந்தட்டில் தமிழில் முதன் முறையாக திருக்குறள் வெளியிடப்பட்டிருக்கிறது. 'குறளமுது' என்ற பெயரில் குறுந்தட்டை துவக்கியவுடன் சென்னையின் வரைபடம் போன்ற ஒன்று காட்டப்படுகிறது (வரைப்படத்தைத் தமிழில் வெளியிட்டிருக்கலாம்.) வரைபடத்தில் வள்ளுவர் கோட்டம், கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, கன்னிமாரா நூலகம், உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் உருபடங்கள் (Icons). இந்த உருபடங்கள் ஒலியுடன் நமக்குத் தேவையான குறளை, தகவலை எளிதில் தேடித் தருகின்றன.

திருக்குறள் என்ற ஒலியோடு வரும் தேடல் பகுதியில் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், ஆகியவற்றுக்குத் தனித்தனி ஒலியுடன் கூடிய உருபடங்களும், தமிழ், ஆங்கிலம், ஃபிரெஞ்சு மலாய்மொழிகளில் அதனன்எளிய



படிப்பகம்

www.padippakam.com

விளக்கத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொரு அதிகாரத்தையும் தோந்தெடுக்கும்போது மாயக் குரலொன்று படித்துக் காட்டுகிறது ஒவ்வொரு குறளையும் சுட்டியால் (Mouse) தட்டியவுடன் (Click) அழகாய் படித்துக்காட்டுகிறது பெண்குரல் ஒன்றும், ஆண்குரல் ஒன்றும். (கவிஞர் அறிவுமதி குரல் போலிருக்கிறதே?)

நூலகம் பகுதியில் சென்றால் திரைப்படங்கள் சிலவற்றில் (இரண்டே இரண்டு !? ) குறள் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காட்டுகிறது திரைப்படம் என்ற பகுதி. உரைகள் பகுதியில் பரிமேலழகர்உரை, வெற்றிஉரை, மு.வ. உரை, கனக சுப்புரத்தினம் உரை மற்றும் ஆங்கிலம் ஃபிரெஞ்சு விளக்கங்களும் உள்ளன. உரைகளை புத்தகங்களில் உள்ளது போல வரிசைப்படி மட்டுமேபார்க்க முடிகிறது. சில குறிப்பான சொற்களுக்கு சலனப்பட விளக்கமும்இடையிடையே உள்ளது.( எ.டு ஏறு, பீலி, ஆமை...)

'தேடல்' பகுதியில் சொல், அணி, எண்விசை வாரியாக குறளைத் தேடி அறிய முடிகிறது. குறிப்பிட்ட சொல், எழுத்து குறளில் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்ற தகவலும், தமிழ், ஆங்கில, ஃபிரெஞ்ச், மலாய் விளக்கங்களும்இப்பகுதியில் உண்டு.

குறளும் மருந்தும், குறளும் சட்டமும் பகுதியில் குறள் பற்றிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சென்னையைச் சேர்ந்த **சென்னை கவிஞர்** என்ற நிறுவனம் இதை வெளியிட்டிருக்கிறது. அவர்கள்தட்டுடன் வழங்கும்சிறிய விள்க்கத்தில் குறிப்பிட்டிருப்பது போல சில சிறியகுறைகள் இருந்த போதிலும் தமிழில் இந்த முயற்சி புதிய யுகத்தின்துவக்கத்தை நோக்கிய நீளப் பாய்ச்சல் என்பதில் சந்தேகமில்லை.

விளக்கப் புத்தகத்தில் குறுந்தட்டைப் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.. ஆனால் இதன் வணிகம், தொழில் நுட்பம் தொடர்பான பகுதிகளில் முற்றிலும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது பெரும்குறையே இத்தட்டையே கணினியில் . பதியும்(Install)முறையும்ஆங்கிலத்திலேயே அமைந்துள்ளது. தமிழில்கணினிநூல்களும், இதழ்களும் ஏராளமாய் வந்து கொண்டிருக்கும் இந்நாளில் தமிழில் இவ்விளக்கங்களை அளிப்பது கடினமா என்ன?. தவிர சென்னை கவிஞர் இவற்றிகு எந்த விதமான உத்திரவாதத்தையும் வழங்கவில்லை எனக்குறிப்பிட்டிருப்பது இதன் வணிகத்தையும் நம்பகத்தன்மையையும் பாதிக்கும். இந்த குறைபாடுதான்இந்நிறுவனம் வெளியிட்டிருக்கும் 'பதமி' என்ற தமிழ் (Word Processor) சொல்லாக்கி மென் பொருளிலும் உள்ளது குறிப்பிடத் தக்கது. இதன்விலை சுமார் ரூ1000/- என்பது சாதாரண கணினிப்பயன்பாட்டாளர்களுக்குக எட்டும் தூரத்தில் இல்லை. விலையைக் குறைத்தால் விற்பனை கணிசமாகக் கூடும் வாய்ப்புள்ளது.

## தியாகி என். வெங்கடாசலம் நினைவு நாள் பொதுக் கூட்டம்



சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட தியாகி என். வெங்கடாசலம் அவர்களின் 22 ஆவது ஆண்டு நினைவு நாள் பொதுக் கூட்டம் 21.9.99 அன்று தஞ்சை, வல்லம் அண்ணா சீரணி அரங்கில் எழுச்சியோடு நடைபெற்றது. தோழர் பி. முருகையன் (தஞ்சை ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர், த.தே.பொ.க.) சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் க. பழநிமாணிக்கம், நா. வைகறை, த.கா. பரமசிவம், பழ. இராசேந்திரன், ஆ. சண்முகம், குழ. பால்ராசு, ரெ. கருணாநிதி, சி. அன்பழகன், வே. தனசேகரன் ஆகியோர் உரையாற்றினர்.

தோழர் கு. முனியமுத்து (ஒன்றியச் செயலாளர் த.இ.மு.) நன்றி கூறினார்.

போதைப் பாக்கான
பான்பராக்கை தடை செய்!
சென்னை கோத்தாரி
நிறுவனத்தில்முற்றுகை. டிசம்பர் 9
- தமிழக இளைஞர் முன்னணி



படிப்பகம்

www.padippakam.com

# நகராட்சிப் பள்ளிகள் மூடுவிழா ஏன்?

- தஞ்சை இறையரசன்

பள்ளி என்றும் பள்ளிக்கூடம் என்றும் கல்வி நிலையங்களைக் கூறுகிறோம். "ஒரு பள்ளி தொடங்கப்பட்டால் நூறு சிறைச் சாலைகள் மூடப்படும்" என்பார்கள். "பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்" என்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடுவார். பள்ளி என்றாலே தூங்குமிடம் என்றுதான் பொருள். ஆம்! சமண முனிவர் படுத்துறங்கும் இடம் பள்ளி எனப்பட்டது. பள்ளி என முடியும் ஊர்ப் பெயர்கள் சமணமுனிவர்களின் வாழ்விடம் சார்ந்த ஊர்களைக் குறிக்கும். சமணத் துறவியர்தாம் வாழும் இடத்தில் இருந்தவாறே, வரும் மக்கட்குக் கல்வியும் மருத்துவமும் தந்தனர். இதனால் பள்ளி என்பது கல்விக் கூடத்தைக் குறிக்கலாயிற்று.

கல்வியைத் தரச் சமண சமயமும் பின் சைவமும் பின் கிறித்துவ சமயமும் முன் வந்தபோது அது தொண்டு ஆயிற்று. ஆனால் அரசன் அல்லது அரசு தன் மக்களுக்குக் கல்வியைத் தருவது "கடமை" ஆகும். அதனால்தான் திருவள்ளுவர் கல்வி என்ற அதிகாரத்தை அரசியலில் வைத்துள்ளார்.

அரசுக்குத் தொழில்கள் மூலம் வருவாய் வருவது போலக் கல்வி மூலம் வருவாய் வருவதில்லை. அதனால் கல்வி என்பதைத் செலவினத்தில் ஒன்றாகவே கருதுகின்றனர். சாராயக் கடையில் கிடைக்கிய வருவாய் கல்விக் கூடத்தில் கிடைக்குமா? ஒரு வேடிக்கை! மராட்டிய மன்னர் சரபோசி காலத்தில் சாராயக் கடையில் வந்த ஆதாயத்தைக் கல்விக் கூடத்துக்குச் செலவிட்டுள்ளனர்.

அரசு, கல்வி நிலையங்களைச் செலவுக்குரியதாகக் கருதுகிறது; பொருள் இழப்புக்குரியதாகக் கூறுகிறது. இன்று அரசு நடத்தும் தொழில்களும் இப்படி ஆகிவிட்டன. ஆனால் தனியார் நடத்தும் தொழிற்சாலைகளும் போக்குவரத்து நிறுவனங்களும் ஆதாயம் அள்ளிக் குவிக்கின்றன. தனியார் நிறுவனங்கள் பொதுமக்களைக் கொள்ளையடிப்பதாலும் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து உறிஞ்சுவதாலும், இலாபம் ஈட்டுகின்றன. இழப்பு ஏற்பட்டாலும் அரசு நல்ல தரமான பொருள்கள் குறைந்தவிலையில் பொதுமக்களுக்குக் கிடைக்கவும் தொழிலாளிகளுக்குத் தகுந்த உழைப்பு முறையான ஊதியம் ஆகியன கிடைக்கவும் செய்ய வேண்டும்.

தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் ஆட்சிப் பொறுப்பில் வெற்று நிருவாகத்தை நடத்திப் பதவி இன்பம் காணவும் நினைக்கின்ற இன்றைய அரசியல்வாதிகள், அமெரிக்காவின் முதலாளித்துவத் தனியுடைமைப் பொருளியல் அடிப்படையில் தொழில்களையும் அரசு அமைப்புகளையும் கல்விக் கூடங்களையும் பெரும் பணக்கார முதலாளிகளிடம் விட்டு (விற்று) வருகின்றனர். போக்குவரத்துத்துறை, அஞ்சல்துறை, கல்வித் துறை முதலியன படிப்படியே தனியாரிடம் சென்று கொண்டிருக்கின்றன.

தொடக்கக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரைத் தனியார் மயமாகி வருகின்றன. மொழி, இனம், நாடு, பொது நலம் பற்றிக் கவலைப்படாத பெரும்பண முதலாளிகள் உலகப் பொருளியல் சந்தையில் தாங்கள் மேலும் மேலும் பெரும் பணம் ஈட்ட அனைத்துத் துறைகளையும் தங்கள் வலைக்குள் அகப்படுத்தி வருகின்றனர். இன்றைய அறிவியலின் - உயர் கல்வியின் வெளிப்பாடாகச் சொல்லப்படுகின்ற கணிப்பொறியும் இணைய(இண்டர்நெட்) வலையும் கூட அப்படித்தான் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கல்வியை வணிகம் செய்யத் தனியார் முன்வந்துள்ளனர்; அரசு தாரை வார்த்துக் கொடுத்து விட்டது.

மிகப்பெரிய பணக்காரர்களும் தம்மிடம் வந்து குவியும் பணத்தை என்ன செய்வதென்று தெரியாதவர்களும் அறவுணர்வுடன் பள்ளிக் கூடம், மருத்துவமனை, கோயில் என்று கட்டினர். ஆனால் இப்போதோ மேலும் பணத்தைப் பெருக்க அரசின் வருமான வரித் தொந்தரவில்லாமல் ஆதாயம் பெருக பள்ளிக் கூடம் மருத்துவமனை கோயில் கட்டுகின்றர்.

பேராயக் கட்சி ஆட்சிக் காலத்தில் நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளப் பணக்காரர்கள் ஆங்காங்கே கல்வி நிலையங்களையும் மாட்டுப் பண்ணைகளையும் தொடங்கினர். திருவாரூரில் இருந்த மிகப் பெரிய அரசுப் பள்ளிக் கூடத்தைத் தியாகராச முதலியார் என்ற தனியாரிடம் அரசே விற்றது.

கருணாநிதி ஆட்சிக் காலத்தில் நிறைய தனியார் பள்ளிகள் - குறிப்பாக ஆங்கில வழிப் பதின்ம (மெட்ரிகுலேசன்) பள்ளிகள் தோன்றின. மேலும் ஆங்கில வழி வகுப்புகளில் நிறைய பிரிவுகள் (செக்சன்கள்) தொடங்க ஏற்பளித்தார். ம.கோ.இரா. (எம்.ஜி.ஆர்.) ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவில் உள்ளது போல் தன் நிதி (சுயநிதி) க் கல்லூரிகள் தொடங்கின.

ஆங்கிலவழிப் பள்ளிக் கூடங்களும் கல்லூரிகளும் அதிகமானதால் அவற்றுக்குத் தீனி போட ஆங்கிலம் சொல்லும் குழந்தைகளைச் செய்யும் தொழிற்சாலைகளாக நகரங்களில்



படிப்பகம்

www.padippakam.com

மட்டுமல்லாது சிற்றூர்களிலும் புற்றீசல் போல ஆங்கில மழலையர் பள்ளிகள் தோன்றின. இப்பள்ளிகளில் மிகுதியான கட்டணம் வாங்கிக் கொண்டு ஆடம்பரமான சூழலில், மாற்றுமொழி பண்பாட்டு இருப்பிடமாக அமைந்த கல்வி தரப்பட்டது. அரசுப் பள்ளிகளும் நகராட்சிப் பள்ளிகளும் ஊராட்சிப் பள்ளிகளும் போதுமான நிதிவசதி இல்லாததாலும் கட்டட வசதி, கழிப்பறை வசதி எதுவுமில்லாததாலும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக அதிக ஊதியம் வாங்கிக் கொண்டு கடமையைச் சரியாகச் செய்யாததாலும், அவை தரமற்ற கல்வியைத் தருகின்றன.

வக்கற்ற ஏழைபாழைகளுக்கு அரசு மருத்துவமனை; வசதியுள்ளோர்க்குத் தனியார் மருத்துவமனை என்னும் நிலை உள்ளது. எனவே வசதியுள்ளவர்கள் தனியார் பள்ளிகளுக்குப் படையெடுக்கின்றனர். நடுத்தட்டு மக்களும் முயன்று பணம் சேர்த்துத் தனியார் பள்ளியில் (தனியார் மருத்துமனை செல்வது போல) தம் பிள்ளைகளைச் சேர்த்தனர். ஓர் ஏழைத் தொழிலாளியும் (ரிக்சா காரரும்) மிகக் கடும்முயற்சியில் தன் பிள்ளையைத் தனியார் ஆங்கிலப்பள்ளியில் சேர்த்து மகிழ்கிறார்.

வசதி குறைவான தரம் குறைந்த ஆங்கில வழிப் பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்குக் குறைவான ஊதியம் கொடுத்துக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவதோடு, குழந்தைகளையும் கசக்கிப் பிழிந்து கத்த, எழுத, மனப்பாடம் செய்ய வைக்கும் தொழிற்சாலைகளாக இருப்பதால் அவற்றில் சேர்க்க வசதி குறைந்தவர்களும் நடுத்தட்டு மக்களும் தயங்குவதில்லை. இவற்றால் அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கைக் குறைந்து விட்டது.

மாணவர்கள் எண்ணிக்கைக் குறையக் குறைய அரசுப் பள்ளிகளில் வேறு இடங்களுக்கு, ஊர்களுக்கு ஆசிரியர்களை மாற்றினர். நகராட்சிப் பள்ளிகள் சிலவாக இருப்பதால் அதற்கும் வழியில்லை. புதிதாக ஆசிரியர்கள் பணி அமர்த்தம் செய்வதும் போயிற்று. தம்மிடம் படிக்கும் மாணவர்கள் கல்வி பற்றியோ வேலை வாய்ப்பு பற்றியோ சிந்திக்காத (சிலர்!) ஆசிரியர்கள் தமக்கு வேலை போய்விடுமோ என்ற கவலை வந்ததும் பணிப் பாதுகாப்பு கோரிப் போராடத் தொடங்கினர்.

நகராட்சி அதிகாரிகள் தமக்கும் கல்விக்கும் தொடர்பில்லை என்று கூறுகின்றனர். ஏழை பாழைகளுக்கும் வசதியற்றவர்களுக்கும் என இருந்த நகராட்சிப் பள்ளிகள் பல மூடப்படலாயின. தஞ்சாவூர் நகராட்சியில் மூன்று பள்ளிகளும் திருநெல்வேலி நகராட்சியில் ஐந்து பள்ளிகளும் இந்தக் கல்வி ஆண்டில் மூடப்பட்டுள்ளன. நமக்குத் தெரியாமல் எத்தனை பள்ளிகள் மூடப்பட்டுள்ளனவோ!

இவை தமிழ் வழிப் பள்ளிகளாக இருப்பதோடன்றி, ஏழை மக்களுக்குக் கல்வி அளித்தவை. கழிப்பறை வசதியும், கூரையும், கரும்பலகையும் அற்ற சரிவரக் கவனிக்கப்படாத வலுவற்ற கட்டடங்களில் இயங்குகிற இப்பள்ளிகளில் பொறுப்பற்ற ஆசிரியர்களும் அதிக பொருள் வசதியும் படிப்பாற்றலும் இல்லாத மாணவர்களும் இருக்கிறார்கள். இப்பள்ளிகளிலும் விதிவிலக்காகச் சில பள்ளிகளில் சிறந்த ஆசிரியர்கள் சிறந்த மாவணர்களை உருவாக்கி வருகிறார்கள்.

நகரின் மையமான பல பகுதிகளில் உள்ள இப்பள்ளிகள் பற்றிக் கவலைப்படாத நகராட்சிகள், இப்பள்ளிகளின் இடத்தைச் சிறிது சிறிதாக எடுத்துக் கொள்வதில் அக்கறையாக இருக்கின்றன. தஞ்சாவூர்ப் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்தில் இருந்த நகராட்சிப் பள்ளியின் இடத்தை நகராட்சி எடுத்துக் கொண்டு பேருந்து நிலையத்தோடு இணைத்துக் கொண்டு விட்டது.

மாணவர்கள் எண்ணிக்கைக் குறைந்து பள்ளி மூடப்பட்டால் நகராட்சி மிகவும் மகிழ்ந்து,. அப்பள்ளியின் கட்டடங்களை இடித்து விட்டு பலமாடி வணிகவளாகங்களைக் கட்டிப் பணம் ஈட்ட முற்படுகிறது. இவற்றைப் பற்றிக் கவலைப்படாத அரசு, எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு அஞ்சித், தொடக்கக் கல்வித் திட்டத்தைப் பரப்ப வானொலியிலும் செய்தித் தாளிலும் விளம்பரங்கள் மூலம் ஆட்சி நடத்தி வருகிறது. மக்கள் திரைப்பட விளம்பரங்களிலும் இலவச விளம்பரங்களிலும் மூழ்கியுள்ளனர்.

இந்த நிலை மாற வேண்டாமா? சிந்திப்போம்; செயலாற்றுவோம்.

### *மணமக்களுக்கு வாழ்த்துக்கள்*

*தஞ்சாவூர் கோரிக்குளம் பகுதி த.இ.மு. தோழர் க. ரெகுபதிக்கும் கோரிக்குளம் திரு. பரமசிவம் - ப. பட்டு இவர்களின் புதல்வி செல்வி ப. அமுதாவுக்கும் திருமணம் தஞ்சையில் 30.6.99 அன்று தோழர் க. பழநிமாணிக்கம் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதிக்கு ரூ.250/- வழங்கப்பட்டது.*

*மணமக்களுக்கு வாழ்த்துக்கள்.*

☆☆☆

### சிறப்புத்தகவல் நேரம்

*த.தே.பொ.க பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் அண்மையில் கனடா சென்று திரும்பினார். இப்பயணத்தை விளக்கும் வகையில் தஞ்சை த.தே.பொ.க. மாவட்டக் குழு சார்பில் சிறப்புத் தகவல் நேரம் 17.9.99 அன்று தஞ்சை பெசண்ட் அரங்கில் நடைபெற்றது.*

*தோழர் சா. பேகன் (மாவட்டச் செயற்குழு த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர் பெ. மணியரசன் கனடா பயணம் குறித்து பல்வேறு அரிய தகவல்களுடன் சிறப்புரையாற்றினார்.*



படிப்பகம்

www.padippakam.com

# காவிரி நீர் கேட்க கர்நாடகத்துக்குப் போன கருணாநிதி

(கற்பனைச் சித்திரம்)

- கு. இராமகிருஷ்ணன்

பட்டேல் : வாங்க மிஸ்டர் கருணாநிதி

கலைஞர் : வணக்கம். கொஞ்சம் தண்ணி

பட்டேல் : என்னது தண்ணியா வந்ததுமே தண்ணி கிண்ணின்ட்டுபேசினிங்கனா நம்ம கூட்டணியே கெட்டு போயிடும்

கலைஞர் : ஏங்க கோச்சிக்கிறிங்க குடிக்க கொஞ்சம் தண்ணிக் கொடுங்கன்னு கேட்டேன் அதுக்குப்போயி

பட்டேல் : சரிசரி கோச்சிக்காதிங்க உட்காருங்க வேற என்ன விஷயமா வந்திங்க

கலைஞர் : உடம்பு எப்படியிருக்குன்னு விசாரிச்சுட்டு அப்படியே முடிஞ்சா பங்கீடு விஷயமா,

பட்டேல் : என்னது பங்கீடா அதான் தேர்தல் முடிஞ்சிடுச்சே

கலைஞர் : நம்ம காவிரிநீர் பங்கீடு விஷயமா,கொஞ்சம் தண்ணீர் வரவேண்டியிருக்கு அத வாங்கிட்டு போலாம்னு வந்தேன்





பட்டேல் : அதான் நம்ம ஒப்பந்தம் போட்டப்பபேசினது தானுங்க நம்ம என்ன பேசினோமோ அது மாதிரிதான் செஞ்சுகிட்டுயிருக்கோம்,அப்ப நீங்க

கலைஞர் : அப்பயிருந்த நிலைமையில ஒத்துக்கிட்டேன் எப்படியும்எனதுநாவன்மையால் , அழகுத்தமிழால் பேசினால் எனதுயிர் தமிழ்மக்கள் சமாதானம் அடைந்து விடுவார்கள் என்று எண்ணினேன், ஆனால் விவசாய உடன்பிறப்புகள் தண்ணீர் வாங்கி தருமாறுஅன்புத் தொல்லை செய்கிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

பட்டேல் : தண்ணீர் விடுவதற்கான வழியும் இல்லை, வகையும்இல்லை எண்ணமும் இல்லை.

கலைஞர் : நிறுத்துங்க, நிறுத்துங்க நான் முன்னாடி சொன்ன மாதிரியில்லயிருக்கு இது என்னோட வசனமாச்சே

பட்டேல் : என்னங்க நம்மல்லாம் ஒரே கூட்டணியிலருக்கோம், நீங்க பேசினாயென்ன, நான் பேசினாயென்ன. தண்ணீர் உங்கிட்டயிருந்தா என்ன எங்கிட்டயிருந்தாயென்ன,

கலைஞர் : நீங்கள் பேசுவது, அர்த்தமற்றது, அப்பத்தமானது, ஆபத்தானது.

பட்டேல் : இது ஒன்னும் தமிழ்நாடுயில்ல,நான் ஒன்னும் தமிழரில்ல நீங்க பேசும் வார்த்தை ஜாலத்திற்கு மயங்குவதற்கோ, பயப்படுவதற்கோ, நாங்க தண்ணீர் தர முடியாது என்னா செய்விங்கன்னு பார்த்தற்றம்

கலைஞர் : நான் அண்ணாவின் பாசறையில் வளர்ந்தவன். நான் பல தோல்விகளோடு கைகோர்த்தவன். இந்தாண்டு தரவேண்டிய மீதி தண்ணீர் 27 டி.எம்.சி யையும் எத்தனை ஆண்டுகளானாலும் என்னுடைய இந்த ஆட்சியில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆட்சியிலாவது போராடி பெற்றே தீருவேன். அது நிகழாமல் போனால் மருமகன் மாறன் பிரதமர் ஆவார் அப்போது பார்த்துக் கொள்கிறேன்.

பட்டேல் : ரொம்ப மிரட்டாதீங்க அப்புறம் இந்தாண்டு விட்ட கொஞ்சம் தண்ணீர் கூட அடுத்த வருஷம் விடமாட்டோம். ஜாக்கிரதை

கலைஞர் : எதையும் தாங்கும் பயிர்கள் எங்களிடம் இல்லையென்றாலும் எதையும் தாங்கும் இதயம் கொண்ட என் தமிழ்மக்கள் இந்நிலை கண்டு அஞ்சமாட்டார்கள், அசரமாட்டார்கள், கண் கலங்கமாட்டார்கள், கலக்கமடையமாட்டார்கள்.

பட்டேல் : உங்க அடுக்குமொழி பேச்சல்லாம் அப்புறமா கேக்கறன், வட்டல் நாகராஜ் வர்றதுகுள்ள சீக்கிரமா பேசிட்டு கிளம்புங்க, அப்பறம் பிரச்சனையானா என்கிட்ட கோவிச்சுக்காதீங்க.

கலைஞர் : இப்பவாவது ஒத்துவந்தீங்களே, நாகராஜ் வர்றதுக்குள்ள பேசிவிட்டு கிளம்பி விடுகிறேன், நம்ம கூட்டணி தலைவர் வாஜ்பாய் தலைமைல முன்பு ஏற்படுத்தின மாதிரி,அதிகாரம் படைத்த உங்க மாநிலத்தை பாதிக்காத ஒரு ஆணையம் ஏற்படுத்தி மறுபடியும் ஒரு ஒப்பந்தம் போட்டுக்குவோம்.

பட்டேல் : ஏதே நீங்க ஆசைப்படறிங்களேனு ஒத்துக்கறேன், பதிமூனு கட்டப் பேச்சு வார்த்தை நடத்திட்ட நீங்க சொன்னது போல செஞ்சுடுவோம். கவலைப்படாம ஓய்வெடுத்துக்குங்க.

கலைஞர் : நீங்கள் எவ்வளவு அன்பாக நியாயமாக பேசுறீங்க ஆனா இந்த கௌடா பேசறதுதான்.

பட்டேல் : கௌடாவ பத்தி மட்டும் பேசாதீங்க. இப்பத்தான் அந்தாள மறந்துட்டு இருக்கேன். அவர நினைச்சாலே இரத்தம் கொதிக்குதுங்க.

கலைஞர் : அய்யயோ நீங்க கோபப்படாதீங்க நான் சொல்ல வந்தது நாச கௌடாவ சாரிசாரி நாகே கௌடாவ பத்தி சொல்ல வந்தேன்.

பட்டேல் : நம்ம நாகே பேசறத எல்லாம் தப்பா நினைச்சுக்காதிங்க சும்மா ஒரு தமாசுக்காக பேசியிருப்பாரு அதான் திரும்பவும் பேச்சு வார்த்தை நடத்தலாம்னு சொல்லிட்டிங்கள்ள இனிமே அவரு பேசாம நான் பார்த்துக்கிறேன்.

கலைஞர் : ரொம்ப சந்தோசம் எல்லாம் நல்லபடியாக முடிஞ்சிடுச்சி, அப்ப நான் கிளம்பறேன்.

பட்டேல் : வெரி சாரி வந்ததுமே தண்ணி வேணும்னு கேட்டிங்க அந்த கூஜாவுல காவிரி தண்ணீர் இருக்கு கொஞ்சம் நாக்கை நனைச்சுட்டு போங்க

பேச்சு வார்த்தை நடத்தி விட்டு தமிழகத்துக்கு வந்த கலைஞர் பத்திரிக்கையாளர் கூட்டத்தில்

*"வெற்றி! வெற்றி! தமிழகத்துக்கு வெற்றி"*

●●●

## திராவிட கழகப் பொருளாளர் கா.மா.குப்புசாமி காலமானார்

திராவிடர் கழகப் பொருளாளரும் தந்தை பெரியார் இயக்கத்தின் தஞ்சைத் தளபதியாய் விளங்கியவருமான ஐயா **கா.மா.குப்புசாமி** அவர்கள் 16.9.99 அன்று தஞ்சையில் காலமானார்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி பெரியவர் கா.மா.குப்புசாமி அவர்களுக்கு தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

-பொதுச் செயலாளர்


## வெளிவந்து விட்டன!

**த.தே.பொ.க. கொள்கை அறிக்கை**
இரண்டாம் பதிப்பு.. ரூ. 5.00

**கார்கில் போரும் காஷ்மீர் சிக்கலும்** ரூ. 6.00
- கி.வெங்கட்ராமன்

**மொழிக் கொள்கை** ரூ. 7.00
- இராசேந்திர சோழன்

**தமிழ்த் தேசமும் தன்னுரிமையும்** ரூ. 20.00
- இராசேந்திர சோழன்

கிடைக்குமிடம்:
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
தொலைபேசி : 32994




படிப்பகம்

www.padippakam.com

# தாமிரபரணிப் படுகொலை மனித உரிமைக் கழகம் அறிக்கை

மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையில் காவல்துறை தடியடியில் தாமிரபரணி ஆற்றில் கடந்த ஜூலை 23 அன்று 17 பேர் இறந்தனர். இதுபற்றிய உண்மையறிய மனித உரிமைக் கழகம் (PULL) முயற்சியில் ஒரு உண்மையறியும் குழு ஏற்படுத்தப்பட்டு அக்குழு கடந்த ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆம் தேதிகளில் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை செய்தது.

காவல்துறைத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களில் 15 பேரையும், கலவரம் நடந்ததைப் பார்த்த சாட்சிகளின் 18 பேரையும் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், மாநாகரக்காவல்துறை ஆணையர், துணை ஆணையர், பாலம் அனைத்து மகளிர் காவல்நிலைய பெண் காவலர்கள் உள்ளிட்ட அதிகாரிகளையும் இக்குழு விசாரித்தது. சம்பவம் நடந்த இடத்தை நெருக்கமாக ஆய்வு செய்தது. அதன்பிறகு இக்குழு அளித்த அறிக்கையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

## இக்குழுவில் இடம் பெற்றவர்கள்

1. சுதா இர்ரமலிங்கம், தலைவர், தமிழ்நாடு - புதுவை PUCL,
2. S. கோபால் சென்னை.
3. D. நாகசகிலா செயற்குழு உறுப்பினர் PUCL, சென்னை
4. இரெ. இராசேந்திர சோழன் தலைமைச் செயற்குழு உறுப்பினர், த.தே.பொ.க.
5. க. பழநிமாணிக்கம் தலைமைச் செயற்குழு உறுப்பினர், த.தே.பொ.க.
6. ராஜசேகர் கோவை.
7. அப்பாஸ் தேவேந்திரன் PUCL, தூத்துக்குடி.
8. அ.வியனரசு தமிழர் தேசிய இயக்கம், தூத்துக்குடி.

## போலீஸ் தடியடி - நியாயமற்ற ஒரு செயல்

போலீஸ் தடியடி துவங்குவதற்கு சரியான காரணம் எதுவாக இருப்பினும், அதிகாரிகள் உடனுக்குடன் செயல்பட்டிருந்தால், நிலையை எளிதில் கட்டுக்குள் கொண்டு வந்திருக்க முடியும். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் நியாயப்படுத்த முடியாத சில காரியங்களைச் செய்திருந்தாலும் கூட, அதைத் தடுப்பதற்கே போலீஸ் தடியடி நடத்தி, மக்கள் மீது கல்லெறிந்து, அவர்களை ஆற்றுப்படுகையின் மீது சுமார் 50 மீட்டர் தூரத்தில் தண்ணீக்குள் தள்ளியது என்பதை நியாயப்படுத்த முடியாது

பல்வேறு புகைப்படங்கள் மற்றும் அடிபட்டவர்கள், நேரடி சாட்சிகளின் கூற்றுகள். மூலமும், மேலும் அனைத்து மரணங்களும் தாமிரபரணி ஆற்று நீரில்தான் நடைபெற்றது என்ற உண்மையின் மூலம் (நீர், சாலையில் இருந்து 50 மீட்டர் தொலைவில் உள்ளது) போலீஸ் கூட்டத்தை கலைப்பதோடு மட்டும் நிற்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதற்குப் பதிலாக, போலீஸ் மக்களைத் துரத்தி தண்ணீரில் தள்ளி 17 பேரின் இறப்பிற்கும் காரணமாக இருந்திருக்கிறது. எந்த நிலையிலும் கூட்டம் கட்டுக்குள் அடங்காமல் போகும்போது கூட்டத்தைக் கலைப்பதே மேலும் வன்முறையைத் தடுப்பதற்கு ஒரே வழியாகும். தடியடி தொடங்கியவுடனே மக்கள் கலைந்து ஓடத் தொடங்கி விட்டனர். அதற்குப் பிறகும், மக்களைத் துரத்தி அடித்தது நியாயப்படுத்த முடியாத ஒரு செயலாகும்.

மேலும் இறந்தவர்களில் திரு. ஏ. சையது அப்துல் ரகுமான் (24) மற்றும் உஷா நவாஸ்(20) இருவரும் நீச்சல் கற்றவர்கள். உஷா நவாஸ் கராத்தே கலை கற்றவரும் கூட. சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விருது பெற்றிருக்கிறார். எனவே, இறந்து போன இவர்கள் இருவருமே நல்ல இளமையான திடகாத்திரமான நீச்சல் தெரிந்த இளைஞர்கள். இதையெல்லாம் பார்க்கும்போது இவர்கள் நீரில் மூழ்கி இறந்தார்கள் எனும் கூற்று நம்பும்படி இல்லை. ஒரே காரணம். போலீஸ் தடியடியின்போது இவர்கள் தலையில் அடித்திருக்க வேண்டும். சுயநினைவிழந்து இவர்கள் நீரில் மூழ்கி இருக்கலாம். உண்மை அறியும் குழுவிடம் பேசிய திருநெல்வேலி மக்கள் பலர் அங்குள்ள மக்கள் பலருக்கு நீச்சல் நன்கு தெரியும் என்றனர். ஏனெனில் ஆற்றில் குளிப்பது பலருடைய பழக்கம். இவ்வாறு இருக்கையில் 17 பேர் நீரில் மூழ்கி இறந்தனர் என்பது ஆச்சரியமளிக்கும்படி உள்ளது.

## போலீஸ் கல்வீச்சு- போலீஸ் அத்துமீறலில் ஒரு புதிய அத்தியாயம்.

மக்கள் கல்லெறிந்ததால் தற்காத்துக் கொள்ளவே போலீஸ் கல்வீச்சு நடத்தியது என்ற தற்காப்பு வாதத்தை போலீஸ் முன் வைக்கிறது. பேரணி நடந்த இடத்தின் நிலப்பரப்பைக் கருத்தில் கொண்டால், ஆற்றுப் படுகை சாலையில் இருந்து சுமார் 15அடி கீழே உள்ளது. கீழேயிருந்த மக்கள் கல் எறிந்திருந்தாலும் கூட, அது மேலே அவ்வளவு வேகமாக வந்திருக்க இயலாது. ஆனால், மேலே ஒரு வசதியான இடத்தில் இருந்த போலீஸ் கல்வீச்சு நடத்தியது அதிக சேதம் ஏற்படுத்தியிருக்கும். காவல்துறை கல் எறிந்தவர்களை கைது செய்திந்தால், நிலை அப்போதே கட்டுக்குள் வந்திருக்கும். ஆனால், போலீஸ் நடத்திய கல்வீச்சு, நிலையை மோசமாக்கியது. இது காவல்துறையின் பொறுப்பற்ற நடவடிக்கை ஆகும்.

## போலீஸ் கமிஷனர் கடமை தவிர்ப்பு

நெல்லை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு. டி.கே. ராசேந்திரன் பேரணி நடந்த இடத்திற்கு வரவே இல்லை. இது ஒரு



படிப்பகம்

குறிப்பிடத்தக்க அம்சமாகும். நிர்வாகம் மிகப்பெரிய பேரணியை எதிர் பார்த்திருந்தும், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் மற்றும் புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டும் கூட கமிஷனர் பேரணிக்கு வரவில்லை. இது பற்றி அவரிடம் உண்மை அறியும் குழு கேட்ட போது அவர் தற்காப்பாக தன்னுடைய "குளு-குளு" அறையில் இருந்தபடியே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டதாக தெரிவித்தார். உண்மை அறியும் குழு கமிஷனரை சந்திக்க சென்றபோது அவர் கலெக்டரிடம் அனுமதி பெற்ற பிறகே பேசினார்.

தடியடி நடந்த இடத்தில் இருந்த அதிகாரிகளுள் காவல் துணை ஆணையர் தான் மூத்த அதிகாரி. அவர் சட்டமன்ற உறுப்பினர்களிடமும் மற்ற தலைவர்களிடமும் பேசிக் கொண்டிருந்தபடியால் தன் பின்னே இருந்த காவல் படையை அவரால் கட்டுப்படுத்த இயலவில்லை. ஜீப்பில் இருந்த தலைவர்களுடன் துணை கமிஷனர் பேசிக் கொண்டிருந்த போதே தடியடி தொடங்கிவிட்டது. அவர், தன் அருகில் இருந்த சில காவலர்களை தடியடி நடத்துவதிலிருந்து தடுத்துப் பார்த்ததாகக் கூறினார். மேலும், திரு.அப்பாவு, எம்.எல்.ஏ.வின் கூற்றுப்படி, உதவி கமிஷனர் ஒரு கான்ஸ்டபிளை கன்னத்தில் அறைந்தும் தடுத்து நிறுத்தப் பார்த்தார் என்பதும் தெரிகிறது. எனவே, மேலும் ஓர் உயர் அதிகாரி அந்த இடத்தில் இல்லாமல் போனது கூட 17 பேர் சாவிற்கு ஒரு காரணமாகும்.

## கலவரக் கும்பல் போன்ற போலீஸ் நடத்தை

23.7.99 அன்று சம்பவ இடத்தில் இருந்த அதிகாரிகள் எவருக்குமே தடியடி உத்திரவு பிறப்பித்தவர் யார் என்று தெரியவில்லை. அங்கிருந்தவர்களுள் உதவி கமிஷனர் ஷைலேஷ் குமார் யாதவ் தான் உயரதிகாரி. ஆனால், அவர் தடியடிக்கான உத்திரவை பிறப்பிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. உதவி கமிஷனர் போலீஸ் தடியடி செய்வதை தடுத்து நிறுத்த முயற்சி செய்துள்ளார். உண்மை அறியும் குழு கமிஷனரிடம் கேட்டபோது அவர் மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு இன்ஸ்பெக்டர் முருகசாமிதான் உத்திரவு பிறப்பித்தார் என்று தெரிவித்தார். அவரது அனுமதி பெறாமல், அவருக்குத் தெரியாமல் ஒரு இன்ஸ்பெக்டர் தடியடி உத்திரவு பிறப்பித்தார் என்பது வியப்புக்குரியதாகும். மேற்கூறிய தகவல்களைக் கொண்டு பார்க்கும்போது, போலீஸ் படை, சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொண்டு கட்டுக்கடங்காமல் செயல்பட்டுள்ளது என்பது மிகத் தெளிவாகிறது. போலீஸ் படை மூத்த அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி ஒழுங்கு முறை மீறி செயல்பட்டுள்ளது. உண்மையில், கலவரக் கும்பல் எனக்குறிப்பிடப்படும் பேரணியில் கலந்துகொண்ட அனைத்து மக்களும் கட்டுப்பாட்டுடன் செயல்பட்ட போது ஒழுக்கத்திற்கு பெயர் பெற்ற போலீஸ் படை கலவரக் கும்பலாக மாறி வன்முறையில் ஈடுபட்டது.

## பெண் போலீசாரை கேலி செய்தல் - வழக்கமாக நியாயப்படுத்துதல்

ஒடுக்கப்பட்டோர் மீது வன்முறை நிகழும்போது, பெண்கள் மீது நடைபெறும் பாலியல் குற்றங்களே, வழக்கமான காரணங்களாக கூறப்படுகிறது. அதுபோலவே, இச்சம்பவத்தில் பெண் போலீசாரை கேலி செய்த காரணத்தால்தான் பேரணி மக்கள் மீது தடியடி நடத்த வேண்டியிருந்தது என காரணம் கற்பிக்கப்படுகிறது. இது கவனத்தை திசைதிருப்பும் ஒரு முயற்சியாகும். இவ்வாறு, முக்கியப் பிரச்சினையில் இருந்து திசைதிருப்பும் முயற்சியை உண்மை அறியும் குழு கண்டிக்கிறது.

## வேலை நிறுத்த உடைப்பு இயந்திரமாக அரசு இயந்திரம்

மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் பிரச்சினை நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள ஒரு பிரச்சினை. இதில்தலையிட கலெக்டருக்கோ போலீசாருக்கோ எந்த அவசியமும் இல்லை. அப்படி சட்ட ஒழுங்கை நிலைநிறுத்த தேவை ஏற்பட்டால், சி.ஆர்.பி.சி செக்ஷன் 151ன்படி அவர்களை காலையில் கைது செய்து மாலை விடுதலை செய்திருக்கலாம். ஆனால், இப்பிரச்சினையில் 650 தொழிலாளர்களை (பெண்கள், குழந்தைகள் உட்பட) கைது செய்யப்பட்டவர்களை அருகில் உள்ள சிறையில் வைக்காமல் சுமார் 250 கி.மீ. தொலைவில் உள்ள திருச்சி சிறையில் அடைத்து பிணை கொடுக்காமல் 45 நாட்கள் வரை அடைத்து வைத்திருந்ததன் மூலம் அவர்களது சம்பளம் கிடைக்காமலும், இதைத் தொடர்ந்து குடும்பங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தி, அரசானது வேலை நிறுத்த உடைப்பு இயந்திரமாக செயல்பட்டுள்ளது.

## பரிந்துரைகள்

1) போலீஸ் மற்றும் பல தனியார் தொலைத் தொடர்புகளும் 23.7.99 நிகழ்ச்சியை வீடியோ மூலம் பதிவு செய்துள்ளது. இந்த சாட்சியைக் கொண்டு வன்முறையில் ஈடுபட்ட காவல்துறையினரை இனங்கண்டு அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும்.

2) இந்த வீடியோ கேசட் நீதிபதி மோகன் கமிஷன் முன் அரசால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இது கொடுக்கப்படவேண்டும்.

3) 23.7.99 அன்றைய போலீஸ் நடவடிக்கைகள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானதாகும். எனவே செ.37 மனித உரிமை பாதுகாப்பு சட்டம் படி சிறப்பு புலனாய்வுக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடத்த வேண்டும்.

4) நியாயமான விசாரணை நடைபெற இக்குழுவில் போலீஸ் உயரதிகாரிகளும் சமுதாயத்தின் முக்கிய நபர்களும் இடம் பெற வேண்டும்.

5) தொழிற்சங்கத் தகராறுகளில் போலீஸ் மற்றும் நீதித்துறை தலையிட்டு வேலை நிறுத்தத் தடுப்பாளர்களாக செயல்படுவது தடை செய்யப்பட வேண்டும்.

6) நீதித்துறை நடுவர்கள் இதுபோன்ற விஷயங்களில் மனிதத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். காவல்

www.padippakam.com

நீட்டிப்பு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் செய்வது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

7) இந்த சம்பவம், மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் சுரண்டலுக்கு எதிரான செயல்பாட்டின் போது நிகழ்ந்துள்ளது. ஆனால், இங்கு மட்டுமல்ல தமிழ் நட்டின் பிற தோட்டங்களிலும் இதே நிலைதான் நீடிக்கிறது. இதுகுறித்து, பி.யூ.சி.எல் ஏற்கெனவே வால்பாறை உண்மை அறியும் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

8) தோட்டக் தொழிலாளர்களின் நிலைமையை விசாரிக்க தனி விசாரணைக் குழு நியமிக்கப்படவேண்டும். இக்குழுவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், மனித உரிமைக் குழுவினரும், கல்வியாளர்களும் மற்றும் சமூகப் பணியாளர்களும் இடம் பெற வேண்டும்.

### அன்றே சொன்னோம்

வாஜ்பேய் தலைமையில் கருணாநிதி ஒப்புக் கொண்ட காவிரி புதிய ஒப்பந்தத்தை வரவேற்று கருணாநிதிக்கு பாராட்டு விழா 23. 8.99 அன்று தஞ்சை திலகர்திடலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பேசியதாவது,

"புதிய ஒப்பந்தத்தை பலர்குறை கூறுகின்றார்கள். பெற்றவளுக்கு தான் பிள்ளையின் அருமை தெரியும்" தமிழக முதல்வர் மு.கருணாநிதி பேசியது.

"நண்பர் நல்லக்கண்ணுவும் பிள்ளையை பெற்றவர். நானும் பிள்ளையை பெற்றவன். பிள்ளையைப் பெற்ற எங்களுக்கு வலிதெரியும்".

இவ்வொப்பந்தத்தை ரத்து செய்யக்கோரியும் ஐ.கே. குஜ்ரால் முன்வைத்த பழைய வரைவு அறிக்கையை செயல்படுத்த கோரியும் த.தே.பொ.க. சார்பில் 25.8.99 திருவையாறு கடைத்தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் பெ. மணியரசன் பேசியதாவது:

"கலைஞருக்கு தஞ்சையில் நடைபெற்ற பாராட்டு விழாக்கூட்டத்தில் தோழர். நல்லகண்ணுவும், கலைஞரும் பெற்றவளுக்குத்தான் வலி தெரியும் என்று சொன்னார்கள். பிள்ளை பிறந்தால் கத்த வேண்டும். இந்த குழந்தையோ ஊமையாக இருக்கிறது. உயிர் மட்டும் லேசாக ஊசலாடிக்கொண்டிருக்கிறது. குழந்தை என்ற பெயரில் வெறும் பிண்டத்தை பெற்றெடுத்து இருக்கிறார்கள். இவ் வொப்பந்தத்தால் கர்நாட்கத்திலிருந்து காவிரி நீரை பெற முடியாது"

அன்று சொன்னது இன்று உண்மை என மெய்பிக்கப்பட்டுள்ளது.


தஞ்சையில்

# தமிழகப் பெருவிழா

1999 நவம்பர் 1,2

காவேரி திருமண மண்டபம் (தஞ்சை நாஞ்சிக் கோட்டை சாலை)



1.11.99 மாலை 4மணிக்குக் கரந்தையிலிருந்து பேரணி புறப்படும். தப்பாட்டம், எழுச்சி இசை, உரையரங்கம்.

2.11.99 வினாவட்டம், கவிக்கோலம் நிழற் சட்டமன்றம் செயல்திட்ட அரங்கம் மற்றும் இசைக் காலை,கலைமதியம், நாடக இரவு.

வாருங்கள் தமிழர்களே!

நா. அருணாசலம்
நிறுவனர்,
தமிழ்ச்சான்றோர் பேரவை.




படிப்பகம்

www.padippakam.com

## காவிரி நீர் உரிமையை மீட்காத தில்லி மற்றும் தமிழக அரசுகளை கண்டித்து விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள்

கடந்த ஆண்டு பிரதமர் வாஜ்பேய் தலைமையில் தமிழக, கர்நாடக, கேரள, புதுவை முதல்வர்கள் பேசி காவிரி தொடர்பாக புதிய ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின் மூலம் கர்நாடக அரசு நடுவர் மன்ற ஆணையை ஏற்றுக் கொண்டு விட்டது என்றும் காவிரி சிக்கல் தீர்ந்ததாகவும் கூறி தமிழக முதல்வர் கருணாநிதிக்கு தஞ்சையில் காவிரி கொண்டான் பட்டம் வழங்கி பாராட்டு விழாவும் நடைபெற்றது.

ஆனால் நடப்பு ஆண்டில் பயிரிடப்பட்டுள்ள குறுவை, சம்பா பயிர்களை காப்பாற்ற நடுவர் மன்ற ஆணைப்படி கர்நாடக அரசு தண்ணீர் விடவில்லை. கருகும் பயிர்களைக் காப்பாற்ற காவிரி நீரைப் பெற போர்க்கால அடிப்படையில் தில்லி மற்றும் தமிழக அரசுகள் செயல்படவில்லை. இவ்வரசுகளின் மெத்தனப்போக்கை கண்டித்தும் காவிரி நீர் உரிமையை மீட்பது குறித்தும் த.தே.பொ.க. சார்பில் விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

### செங்கிப்பட்டி

20.9.99 மாலை செங்கிப்பட்டியில் விளக்கத் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ரெ. கருணாநிதி(மாவட்ட செயற்குழு, த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர் நா.வைகறை (பொதுச் செயலாளர், த.இ.மு.) சிறப்புரையாற்றினார்.

### குடந்தை

கும்பகோணம் மகாமகக்குளக்கரை அருகிலும், சாரங்கபாணி சன்னதி அருகிலும் 22.9.99 அன்று சிறப்பாக நடைபெற்றது. தோழர். சா.பேகன் (குடந்தை நகரச் செயலாளர் த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர்கள் இராசேந்திர சோழன், நா.வைகறை ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் செல்வம் நன்றி கூறினார்.

### திருக்காட்டுப்பள்ளி

காந்தி சிலை அருகில் 22.9.99 அன்று தோழர் ஆ. சண்முகம் (பூதலூர் ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் விளக்கத் தெருமுனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் பெ. மணியரசன், க. பழநிமாணிக்கம், சி. அன்பழகன், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### திருவையாறு

23.9.99 அன்று நீதிமன்ற சாலையில் தோழர் சி. அன்பழகன் (திருவையாறு ஒன்றிய செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் விளக்கத் தெருமுனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் இராசேந்திர சோழன், க. பழநிமாணிக்கம், த.கா. பரமசிவம், நா.வைகறை, ஆ. சக்திவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தோழர் த. திலகர் (ஒன்றியத் தலைவர் த.இ.மு.) நன்றி கூறினார்.

### பூதலூர்

23.9.99 அன்று பூதலூர் கடைத் தெருவில் தோழர் குழ. பால்ராசு (மாவட்ட செயற்குழு த.தே.பொ.க.) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தோழர் பெ.மணியரசன் சிறப்புரையாற்றினார். தோழர் கி.வெங்கட்ராமனும் விளக்கவுரையாற்றிரார்.

## தமிழக இளைஞர் முன்னணி தொடக்க விழா பொதுக்கூட்டம்

தஞ்சை ஒன்றியம் குருவாடிப்பட்டியில் த.இ.மு. கொடியேற்று விழா பொதுக்கூட்டம் 11.8.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் சான்சன் (கிளைச் செயலாளர் த.இ.மு.) தலைமை தாங்கினார். தோழர் தே. நெப்போலியன் வரவேற்புரையாற்றினார். தோழர் இராசேந்திர சோழன் த.இ.மு. கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் க. பழநிமாணிக்கம், நா. வைகறை, பி. முருகையன் குழ. பால்ராசு, சி. அன்பழகன், வே.தனசேகரன், கு.முனியமுத்து ஆகியோர் உரையாற்றினர்.

தோழர் கு. அமலதாஸ் (கிளைத் தலைவர், த.இ.மு.) நன்றி கூறினார்.

## மணமக்களுக்கு வாழ்த்துக்கள்

சிதம்பரம் வாகீச நகரைச் சார்ந்த முனைவர் செள. வேணுகோபால் - செளந்தர நாயகி இவர்களின் புதல்வன் தோழர் வே. ரவீந்திரன் அவர்களுக்கும் சென்னையைச் சார்ந்த திரு. A. இலட்சுமணன் - சரஸ்வதி இவர்களின் புதல்வி செல்வி இ. அலமேலு அவர்களுக்கும் திருமண விழா 5.9.99 அன்று சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதிக்கு ரூ.500/- வழங்கப்பட்டது.

மணமக்களுக்கு வாழ்த்துக்கள்.

♦♦♦



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசிய விழுதுகள்

## சிந்தனையாளர் மா. அர்த்தநாரி பற்றி.....

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளியில் வசிக்கும் சிந்தனையாளர் **மா.அர்த்தநாரி** தமிழ்த் தேசிய முகாமிற்கும் தமிழ் உணர்வாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் நன்கு அறிமுகமானவர்.

நூல் நெசவுத் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் நூலாசிரியராக வளர்ச்சி பெற்ற அதிசயம் விடா முயற்சியின் ரகசியம் ஆகும். மேதைமை என்பது விடா முயற்சியும் வியர்வையும் ஆகும் என்று அறிஞர்கள் கூறுவர்.

எழுபத்தாறு வயது நிறைந்த "இளைஞரான" சிந்தனையாளர் மா. அர்த்தநாரி ஓர் ஏழை நெசவுக் குடும்பத்தில் மாதையன் - இரங்கம்மாள் தம்பதியருக்கு ஐந்தாவது குழந்தையாக பிறந்தார். வறுமை காரணமாக நான்காம் வகுப்புடன் பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டு நெசவு வேலைக்குப் போய் விட்டார். பத்தாவது வயதில் தந்தையை இழந்த அர்த்தநாரிக்கு வறுமையின் அத்தனை கோணங்களும் அத்துப்படி.

கைத்தறியில் நெய்து கொண்டிருந்த காலத்தில் அதாவது அவருடைய பதினோரு வயதிலேயே புத்தகம் படிக்கும் பழக்கம் அவருக்கு ஏற்பட்டது. இது பற்றி அர்த்தநாரி கூறுகிறார். "மாலை நேரங்களில் கம்பராமாயண சுருக்கம், பக்த விஜயம், விக்ரமாதித்தன் கதைகள், அல்லி அரசாணி மாலை, மகாபாரத சுருக்கம் இன்னும் இதுபோன்ற நூற்களை நான் ஓரளவு இராகம் போட்டு படிக்க, மற்றவர்கள் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு கேட்பார்கள். படிக்கிற எனக்கு பல்வேறு சிறப்புகளையும் செய்வார்கள்".

இவ்வாறு தொடர்ந்த படிப்பறிவு அர்த்தநாரியை சிவ பக்தனாக உருவாக்கியது. சிவ பெருமானை நேரில் காண வேண்டும் என்கிற ஆசை நெஞ்சுக்குள் தீயாகக் கனன்றது. பாழடைந்து கிடந்த நங்கவள்ளி சிவன் கோவிலுக்கு நள்ளிரவு நேரங்களில் சென்று நேரில் தரிசிக்க சிவ பெருமானைத் தேடினார்.

"அங்கு நான் சிவ பெருமானைக் காணவில்லை பொந்துகளில் அடைந்து கிடந்த பாம்பு, கோட்டான், கூகை இவைகளைத்தான் கண்டேன்" என்கிறார் அர்த்தநாரி.

இருபத்தோரு வயதில் தனிக்குடித்தனம் தொடங்கிய அர்த்தநாரியும் அவர் துணைவியார் பத்மாவதியும் அடைந்த துன்ப துயரங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. அதே அர்த்தநாரி அவர்கள் இப்பொழுது கைத்தறி துணி ஏற்றுமதி நிறுவனத்திற்கு உரிமையாளர். அவர் மகன்கள் நால்வரும் தொழிலைக் கவனித்துக் கொள்கிறார்கள்.

வாட்டும் வறுமைக் கிடையேயும் நூல் படிக்கும் நாட்டம் மிகுதியாகவே இருந்தது. தாகம் தணிக்கக் கற்றறிந்தோர் பலரை நாடினார். சலகை ப. கண்ணன், தம்பிக்குறள் கு. ந. அர்த்தநாரி, திருக்குறள் மொ. காளியப்பனார் ஆகியோர் அர்த்தநாரிக்கு நூலறிவு வழங்கியவர்களில் முக்கியமானவர்கள். திருக்குறள் மொ. காளியப்பனார் அவர்களைக் கொண்டு பத்தாண்டுகளுக்கு மேலாக சலகண்டபுரத்தில் வாரந்தோறும் திருக்குறள் வகுப்பு நடக்க முக்கிய காரணமாக இருந்தார் அர்த்தநாரி.

"ஏற்கெனவே எனது மண்டையில் ஏறி உட்கார்ந்து கொண்டிருந்த இதிகாச அறிவும், புதிதாகப் புகுந்த திருக்குறள் அறிவும் சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்டன" என்கிறார் அர்த்தநாரி. தந்தை பெரியாரின் சுய மரியாதைக் கருத்துக்கள் பால் ஈர்ப்பு ஏற்பட்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்து இரயில்வே நிலையத்தில், இந்தி அழிப்பு, சட்ட எரிப்பு, இந்தியா பட எரிப்பு, உணவு விடுதியில் பிராமணான் எழுத்து அழிப்பு ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டதால் மூன்று முறை கைதானார்.

திராவிடர் கழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த போதே அர்த்தநாரியும் அவருடைய தோழர்களும் மார்க்சியம் படிக்கத் தொடங்கினர். அர்த்தநாரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து மின் கட்டண உயர்வு எதிர்ப்புப் போராட்டம், நில மீட்சிப் போராட்டம், விலைவாசி குறைப்புப் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு மும்முறை சிறை சென்றிருக்கிறார். காலப் போக்கில் மார்க்சிய வாதிகள் கூறும் கருத்துகள் மீது இவருக்கு ஐயமும் மறுப்பும் எழத் தொடங்கி இறுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகினார். அதன் பிறகு இன்று வரையில் எந்தக் கட்சியிலும் அவர் உறுப்பினர் இல்லை. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிய பிறகு குடும்ப வளர்ச்சியில் முழு கவனம் செலுத்தியதாக அவர் கூறுகிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக இளமைக்காலத்திலேயே குரல் கொடுத்தும் சேரிகளில் தங்கி உணவுண்டும் அங்குள்ள உழைப்பாளிகளை தம் சமையலறைக்கு அழைத்து வந்து உண்பித்தும் மகிழ்ந்தவர் அர்த்தநாரி.

அர்த்தநாரி, **சிந்தனையாளர் மா. அர்த்தநாரி** என்று கூறும் அளவிற்கு வளர்ச்சி பெற்றார். அவர் எழுதும் நூல்கள் உடன் விற்று விடுகின்றன. பதினாறு நூல்கள் எழுதியுள்ளார்.

அவற்றுள் சில:

1. இதோ கடவுள் இருக்கிறார்! இவரை ஒழிப்பது எப்படி?



படிப்பகம்

www.padippakam.com

2. தின மணியாரே, மொழித்துறையில் இன்னும் நாங்கள் மடையர்களா?
3. நாம் சோசலிச வாழ்வைப் பெற எப்படிப் போராட வேண்டும்?
4. ஒரே வழி - கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க ஒரே வழி
5. ஆங்கில நர்சரிப் பள்ளியும் குழந்தைகளின் எதிர்காலமும்
6. பார்ப்பனியமும் வள்ளுவமும்
7. பிற மொழியில் சுய சிந்தனை வளருமா?
8. கோழியும் குப்பாயியும்
9. சுடுகாட்டில் திருமணம்

இப்பொழுது இவரது முழுக் கவனமும் தமிழைக் கல்வி மொழியாக்கிட, ஆட்சி மொழியாக்கிட நடத்த வேண்டிய இயக்கங்களில் படிந்துள்ளது. தமிழைக் கல்வி மொழியாக்கிட தமிழ்ச் சான்றோர் பேர்வை கடந்த ஏப்ரல் மாதம் நடத்திய நூறு தமிழ் உணர்வாளர்களின் சாகும் வரையிலான பட்டினிப் போராட்டத்தில் இவர் கலந்து கொண்டார். இவரை நாய் கடித்து அந்த சிகிச்சை முழுமை பெறாத நிலையில் பட்டினிப் போராட்டத்தில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் உண்ணா விரதத்தின் இரண்டாவது நாள் இவர் மயங்கி விழும் நிலை ஏற்பட்டது.

கை நெசவுத் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி தொழில் அதிபராக வளர்ச்சி பெற்ற அதே காலத்தில் சிந்தனையாளர் மா. அர்த்தநாரி தொடர்ச்சியாகப் போராட்டங்களில் கலந்து கொண்டு கைதாவதும் சிறை செல்வதுமாக இருந்திருக்கிறார். இது அவரது போர்க்குணத்திற்குச் சான்று.

இப்பொழுது தமிழ் வழிக் கல்வி, தமிழ்த் தேசியம் ஆகியவற்றிற்கான இயக்கங்களுக்கு உறுதுணையாக இருக்கிறார். தமிழ்த் தேசிய விழுதுகளில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவர் ●

நிகரன்

### *மணமக்களுக்கு வாழ்த்துக்கள்*

சிதம்பரம் வரகூர் பேட்டை பகுதி த.தே.பொ.க. உறுப்பினர் தோழர் **ஆ. சிவஞானம்** அவர்களுக்கும், குடவாசல் வட்டம் பிலாவடியைச் சேர்ந்த திரு. சா. குமாரசாமி அவர்களின் புதல்வி செல்வி **கு. அமுதா** அவர்களுக்கும் இல்வாழ்க்கை ஒப்பந்த விழா 16.9.99 அன்று சிதம்பரத்தில் தோழர் இராசேந்திர சோழன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதிக்கு ரூ.250/- வழங்கப்பட்டது.

மணமக்களுக்கு வாழ்த்துக்கள்.

## பான்பராக்கை தடை செய்!

**சென்னை கோத்தாரி நிறுவனத்தில்முற்றுகை.**
**டிசம்பர் 9 - தமிழக இளைஞர் முன்னணி**

## *யாருக்கும் வெட்கமில்லை எவருக்கும் நம் வாக்கில்லை*

நடைபெற்ற 13ஆவது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட கூட்டணிகள் அனைத்துமே சந்தர்ப்பவாத அணிகள். தமிழக உரிமைக்கு குரல் கொடுக்காத கூட்டணிகள். இக் கூட்டணிகளை புறக்கணிக்க கோரியும், நாற்காலி அரசியலுக்கு வெளியே தமிழ்த் தேச தன்னுரிமை என்ற அரசியல் நோக்கு நோக்கி நடத்தப்படும் மக்கள் திரள் போராட்டத்தின் வழி மட்டுமே விடிவு கிடைக்கும் என்பதை விளக்கியும் த.தே.பொ.க. சார்பில் விளக்க தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. (சென்ற இதழில் பல கூட்டங்கள் பற்றிய செய்தி வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சி இது)

### காஞ்சிபுரம்

காந்தி சாலையில் உள்ள காமராசர் சிலை அருகிலும், பேருந்து நிலையம் அருகிலும் 7.9.99 அன்று நடைபெற்ற தெருமுனைக் கூட்டங்களுக்கு தோழர் ச. யோகநாதன் (சென்னை காஞ்சி மாவட்டச் செயலாளர் த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர்கள் இராசேந்திர சோழன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.தே.பொ.க.) அ.பத்மநாபன் (பொதுக்குழு உறுப்பினர் த.தே.பொ.க.) சி.நடராசன் (மாவட்டச் செயலாளர் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி) கே. எஸ். கோவிந்தசாமி (நகரச் செயலாளர் த.தே.பொ.க.) இரா. வெங்கடேசன் (த.இ.மு.) சு. சுதாகர் (த.மா.மு.) ஆகியோர் விளக்க உரையாற்றினர்.

தோழர் அரிகிருட்டினன் நன்றி கூறினார்.

### சென்னை

சென்னை அசோக் நகரில் 8.9.99 அன்று நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்திற்கு தோழர் பொ. மாயவன் (கிளைச் செயலர், த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர்கள் பெ. மணியரசன் சி.நா. ஆறுமுகம் ம. செந்தமிழன் ஆகியோர் உரையாற்றினர்.

தோழர் இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

### ஜாபர்கான்பேட்டை

த.தே.பொ.க. தேர்தல் நிலை விளக்கக் கூட்டம் 6.9.99 அன்று சென்னை ஜாபர் கான்பேட்டையில் தோழர். இரா. பாலசுப்பிரமணியன் (பொதுக்குழு உறுப்பினர், த.தே.பொ.க.) தலைமையில் நடைபெற்றது. தோழர் இராசேந்திர சோழன் சிறப்புரை நிகழ்த்தினார். திரு. சா. சந்திரேசன் (தலைவர், கொத்தவால்சாவடி மொத்த வணிகர் சங்கம்) தோழர் அ. பத்மநாபன் (பொதுக்குழு உறுப்பினர், த.தே.பொ.க.) தோழர். சி. நா. ஆறுமுகம் ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினார்கள் தோழர் இராமச்சந்திரன் நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை ஆண்டு விழா

சென்னை அசோக் நகர் தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை கடந்த ஆகஸ்ட் 98ல் துவக்கப்பட்டது.

பொது கருத்தரங்கங்களும், தமிழ்வழிக் கல்வி, தமிழ் அர்ச்சனை ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்ட பெருவாரியான ஆர்வலர்களைத் திரட்டி இயக்கப் பணிகளையும் ஆற்றியுள்ளது. அதன் முதலாண்டு நிறைவு விழா பேரவையின் காப்பாளர் திரு. சா. சந்திரேசன்(கொத்தவால் சாவடி மொத்த வணிகர் சங்கத்தின் தலைவர்) அவர்களது சீரிய தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஆண்டு விழாவை ஒட்டி, அசோக் நகர், கே.கே. நகர், மே.மாம்பலம், மேற்கு சைதை, ஜாபர்கான்பேட்டை பகுதியில் உள்ள 15க்கும் மேற்பட்ட உயர்நிலை, மற்றும் மே.நிலை பள்ளி மாணவர்களின் திறம் வெளிப்படும் முறையில் கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கியது. 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டதோடு பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்களின் பங்களிப்பும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பத்தாம் வகுப்பில் கூடுதல் மதிப்பெண் வாங்கிய மாணவரைச் சிறப்பிப்பது என்ற திட்டத்தின்படி மாணவருக்கும் மட்டுமின்றி பெற்றோர் ஆசிரியர் பள்ளி ஆகியோருக்கு பாராட்டி கேடயம் வழங்கப்பட்டது. வி. காயத்ரிக்கு 1000 ரூபாய் பண முடிப்பும், பள்ளிக்கு கேடயமும் (அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி) காப்பாளர் திரு. சந்திரேசன் அவர்களும், தமிழ்ச் சான்றோர் பேரவையின் நிறுவனர் திரு. நா. அருணாசலம் அவர்களும் வழங்கினார்கள். தமிழக வணிகர் சங்க தலைவர் திரு. த. வெள்ளையன் அவர்களை பாராட்டி கேடயம் வழங்கப்பட்டது.

எழுச்சிக் கவிஞர் தணிகைச் செல்வன் அவர்களின் கவி வீச்சுடன்,கவிஞர் ஜெயபாஸ்கரன் தலைமையில் "மெல்லத் தமிழ் இனி ஆளும்" கவியரங்கத்தில், கவிஞர்கள் பச்சியப்பன் தமிழமுதன், வசந்தகுமார், தாயுமானவன் ஆகியோர் பங்கு பெற்ற கவியரங்கம் ஆர்வலர்களால் பெரிதும் ரசிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர் நா. அருணாசலம் அவர்கள் தமிழ் வழிக் கல்விப் போராட்டத்தின் தேவையையும் தமிழ்ச் சான்றோர் பேரவை 1000க்கு மேற்பட்ட தமிழ் அமைப்புகளை தமிழகம் முழுவதும் இணைந்து நடத்திய எழுச்சி மிக்க போராட்டத்தையும், மிகவும் தன்னடக்கத்துடன் விவரித்ததோடு, போராட்டத்தின் பலன்கள் தமிழக அரசினால் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அது நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் எனவும் குறிப்பிட்டார்.

தென் மண்டலத்திரைப்படத் தணிக்கை குழு உறுப்பினர் ஞான இராசசேகரன் ஐ.ஏ.எஸ், திரை நிகழ்ச்சி எவ்வாறு நுகர்வுக் காலாசாரத்தின் வடிகால்களாக விளங்குகின்றன என்று விளக்கியதோடு அத்துறை மேம்பட எடுக்க வேண்டிய முயற்சிகள் குறித்தும் குறிப்பிட்டார்.

திரைப்பட இயக்குனர் வி. சேகர் அவர்கள் தமக்கே உரிய பாணியில் தனது திரைப்பட அனுபவங்களை அனைவரும் ரசிக்கும்படி பேசி திரையுலகை ஆக்கிரமித்து வரும் பெரும்புள்ளிகள் எப்படி தமிழ் ; தமிழர் நலனுக்கு விரோதமாக இருக்கிறார் என்பதை குறிப்பிட்டார்.

பேரவை அமைப்பாளர் பொ. மாயவன் ஓராண்டு நடவடிக்கை அறிக்கையினை அளிக்கவும், த.க.இ. பேரவை மாநகர அமைப்பாளர் இரா. பாலு வரவேற்புரையும், திரு. கருணாநிதி அவர்கள் நன்றியுரை வழங்கிட , தீ.மா.முன்னணி தோழர் நிர்மலா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

தேர்தல் அமளியில் சென்னை நகரே குலுங்கிய வேளையிலும் இக் கூட்டத்திற்கு பெருமளவில் தமிழ் உணர்வாளர்களும் - ஆர்வலரும் பங்கு பெற்றனர் என்பது குறிபிடத்தக்கது.

## தோழர் பி. சீனிவாசராவ் நினைவு நாள் பொதுக் கூட்டம்

கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் உயர் சாதி பண்ணை ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று படுத்தி பொதுவுடைமை இயக்கத்தை ஏற்படுத்தி, போராடி உரிமைகள் மீட்டுக் கொடுக்கத் தலைமை தாங்கிய தோழர் பி. சீனிவாசராவ் அவர்களின் நினைவு நாளை ஒவ்வொரு ஆண்டும் திருத்துறைப்பூண்டியில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சிறப்பா கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டும் திருத்துறைப்பூண்டி த.தே.பொ.க. ஒன்றியக் குழு சார்பில் 30.9.99 அன்று பழைய பேருந்து நிலையம் அருகில் பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் ஜோசப் (ஒன்றியச் செயலாளர் த.தே.பொ.க.) தலைமை தாங்கினார்.

தோழர் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர் த.தே.பொ.க.) சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் இரெ. செ. பாலன்(ஒன்றியச் செயற்குழு) பொ. செல்வராசன்(ஒன்றியச் செய்ற்குழு) கா. இராஜா( நகரச் செயலாளர்) ஆகியோர் உரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவில் தமிழ் ஏது?

## டொரண்டோ விமான நிலையத்தில் கேள்வி!

பெ. மணியரசன்

டொரண்டோ நகரில் செயல்படும் தமிழ்கலை தொழில் நுட்பக்கல்லூரி(Academy of Tamil Arts and Technology) சார்பில் என்னை கனடாவுக்கு அழைத்திருந்தார்கள். இக் கல்லூரியின் தாளாளர் திரு. சுப்ரமணியம் இராசரத்தினம் ஆவார்.

5.8.99 விடியற்காலை 0.30 மணிக்கு (இரவு 12.30 கனடா நேரம்) டொரண்டோ விமான நிலையத்தில் இறங்கினேன். குடியுரிமை சரிபார்க்கும் (Immigration) பிரிவுக்குச் சென்றேன்.



மாண்ட்ரியல் நகரில் நடந்த ஈழத் தமிழர் எழுச்சி விழாவில்

அங்கு அலுவல் பார்த்த பெண்மணி எனது கடவுச் சீட்டை பார்த்துக் கொண்டே என்னை விசாரித்தார்.

அலுவலர்: எங்கிருந்து வருகிறீர்கள்?
நான் : இந்தியாவிலிருந்து....
அலு : உங்களுக்கு பஞ்சாபி தெரியுமா?
நான் : தெரியாது
அலு : உருது தெரியுமா?
நான் : தெரியாது.
அலு : உங்கள் தாய் மொழி என்ன?
நான் : தமிழ்
அலு : அப்படியென்றால் இலங்கையிலிருந்து வருகிறீர்களா?
நான் : இல்லை. இந்தியாவிலிருந்து வருகிறேன்.
அலு : இந்தியாவில் தமிழ் ஏது?
நான் : 60 மில்லியன் பேர் இந்தியாவில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருக்கிறார்கள்.
அலு : இலங்கையில்தான் தமிழ் பேசும் மக்கள் இருக்கின்றார்கள்.
நான்: இலங்கையிலும் இருக்கிறார்கள் இந்தியாவின் தென் பகுதியில் தமிழ் நாட்டிலும் தமிழ் பேசுபவர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாடு இந்திய மாநிலங்களில் ஒன்று.
அலு : அதுபோல் தெரியவில்லையே. இலங்கையில்தான் தமிழ் பேசுகிறார்கள்.
நான் : அமெரிக்காவிலும் ஆங்கிலம் பேசுகிறார்கள். கனடாவிலும் ஆங்கிலம் பேசுகிறார்கள். தனித்தனி நாடுகளாக அவை இல்லையா? அப்படித்தான் தமிழ் நாடும் இலங்கையில் உள்ள ஈழமும்!

இருந்தாலும் அம்மையாருக்கு ஐயம் நீங்கவில்லை. இலங்கையிலிருந்து கனடா வந்து அகதி உரிமை கேட்கப் போகிறாரோ என்ற சந்தேகம் அவருக்கு. இரண்டு மேஜைகள் தள்ளி அமர்ந்திருந்த ஒருவரிடம் போய் தனது சந்தேகத்தைக் கேட்டார். அவர் நான் சொல்வது உண்மைதான் என்று சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். அங்கிருந்து வந்தவுடன் "நல்லது பை-பை போய் வாருங்கள்" என்று எனக்கு விடை கொடுத்தார்.

வெளியே வந்தால் என்னை அழைத்துச் செல்ல யார் இருப்பார்கள் என்று தெரியவில்லை. அடையாளம் தெரியாதவர்கள் எப்படி ஒருவரை ஒருவர் கண்டுகொள்வது? வெளியே வந்து கொண்டே, காத்திருப்போர் பகுதியில் என் கண்கள் தேடின.

இருவர் சிரித்துக் கொண்டே கையை உயர்த்தினார்கள். நானும் சிரித்துக் கொண்டே கையை உயர்த்தினேன்.

ஆயிரம் ஆடுகள் இருந்தாலும் குட்டி தன் தாயைக் கண்டு கொள்வது போல - ஆடு தன் குட்டியைக் கண்டு கொள்வது போல ஈழத் தமிழரும் தமிழகத் தமிழரும் அடையாளம் கண்டு கொள்வது ஒன்றும் அரிய செய்தி அல்லவே!

அந்த இருவரில் ஒருவர் அண்ணன் சு. இராசரத்தினம் இன்னொருவர் அன்புத் தம்பி அறிவின்பன் (விவேகானந்தன்)

நள்ளிரவு - சில்லென்ற காற்று! காரில் பயணம். எங்களுக்கு முன்னே. வானத்தில் நிலா! எங்களுக்கு வழிகாட்டிச் செல்வது போல் நிலா முன்னே போய்க் கொண்டிருந்தது.

விமான நிலையத்தில் தமிழ் மொழி பற்றி எழுந்த சர்ச்சையைச் சொன்னேன் அவர்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

சீக்கியர்கள் இங்கு நிறையபேர் வாழ்வதால் - இந்தியா என்றால் இங்குள்ளவர்களுக்கு பஞ்சாபி மொழி நினைவுக்கு வருகிறது. ஈழத்தமிழர்கள் 2 லட்சம் பேர் கனடாவில் வாழ்வதால், தமிழ் என்றவுடன் அவர்களுக்கு இலங்கை நினைவுக்கு வருகிறது என்றார் இராசரத்தினம்.

நான் சொன்னேன், அது மட்டுமல்ல, போராடுபவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

பெயர் தானே உலகெங்கும் விளங்கும். விடுதலைப்புலிகள் நடத்தும் விடுதலைப் போர் உலகெங்கும் தமிழர்கள் பரவ வழி செய்திருக்கிறது. உலகெங்கும் சாதாரண மக்களும் தமிழ்மொழி பற்றி அறிந்திருக்க வாய்ப்பளித்திருக்கிறது. தம்பியரால் அண்ணன்கள் அறிமுகமானால் அதுவும் ஒரு பெருமை தானே! ●

# நான்கு தமிழர் உயிர் காக்க குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு!

பேரன்புடையீர்,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பூவிருந்தவல்லி தடா நீதி மன்றம் 26 பேர்களுக்கும் தூக்குத் தண்டனை வழங்கியிருந்தது. தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு தமிழர் நிதி திரட்டி மேல் முறையீடு செய்ததில் உச்ச நீதி மன்றம் 19 பேரை விடுதலை செய்தது. மூவருக்கு மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. நால்வருக்கு மரண தண்டனையை உறுதி செய்தது.



நான்கு தமிழர்கள் உயிரைக் காக்க உச்ச நீதி மன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. சி.பி.ஐ.யும் கீழ் நீதி மன்ற தண்டனையை அப்படியே உறுதி செய்ய வேண்டும் என்று கோரி மறு ஆய்வு மனு தாக்கல் செய்தது.

இதன் மீது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.டி.தாமஸ், வாத்வா, காத்ரி ஆகியோர் 8.10.99 அன்று அளித்த தீர்ப்பில், நமது மறு ஆய்வு மனுவையும் சி.பி.ஐ.யின் மறு ஆய்வு மனுவையும் தள்ளுபடி செய்தார்கள்.

நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர்க்கான மரண தண்டனையை உறுதி செய்துள்ளார்கள்.

இப்பொழுது இந்நால்வர் உயிரையும் காப்பாற்ற நமக்குள்ள ஒரே வழி குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு அனுப்புவதுதான்.

ஏற்கெனவே கருணை மனு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் நிறைய கையொப்பங்கள் வாங்கி உடன் த.ஈ.வி.ஆ.ஒ. குழுத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் முகவரிக்கு அனுப்புங்கள். கருணை மனு விண்ணப்பங்கள் வேண்டுவோர் உடன், திரு. பழ. நெடுமாறன் அவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அடுத்து இன்னொரு வேண்டுகோள். குடியரசுத் தலைவருக்கு உள் நாட்டஞ்சலில் (Inland Letter) நான்கு தமிழர்களுக்கும் மரண தண்டனையை ரத்து செய்யுமாறு கோரி மடல்கள் அனுப்புங்கள். இதற்கான மாதிரி மடல் விரைவில் வெளியிடப்படும்.

தங்கள் அன்புள்ள
**பெ. மணியரசன்**
செயலாளர், தமிழர் நிதி

## சென்னையில் கர்நாடக அரசுப் போக்கு வரத்து அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்டம்

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்புப்படி காவிரி நீர் தரமறுக்கும் கர்நாடகத்திற்கெதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கக் கோரும் போராட்டத்தின் ஒருபகுதியாக 1.10.99 அன்று சென்னை பாரிமுனையில் உள்ள கர்நாடக அரசுப் போக்குவரத்து அலுவலகத்தை இழுத்துப் பூட்டிப் போராட்டம் நடத்தினர் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் வடமாவட்டப் பகுதித் தோழர்கள்.

த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் ச. யோகநாதன் தலைமையில் நடந்த இப்போராட்டத்தில் அவர் உள்ளிட்டு 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தை வாழ்த்தி தமிழ்ச் சிந்தனையாளர் மன்றக்காப்பாளர் திரு. சா. சந்திரேசன், த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் இராசேந்திர சோழன், தோழர் பெ. மணியரசன் ஆகியோர் பேசினர்.

மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## *காவிரி நீர் உரிமை மீட்பு பொதுக் கூட்டம்*

காவிரி வளத்தை கொள்ளையிடும் கர்நாடகத்திற்கு துணைபோகும் தில்லி அரசைக் கண்டித்தும், காவிரி உரிமை மீட்காத தமிழக அரசை கண்டித்தும், குடந்தை காவிரி உரிமை மீட்பு உழவர் இயக்கத்தின் சார்பில் 2.10.99 சனிக்கிழமை அன்று சுவாமிமலை தேரடி பகுதியில் பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு. க. சின்னையன் (குடந்தை ஒன்றிய அமைப்பாளர் கா.உ.மீ.உ.இ.) தலைமை தாங்கினார்.

தோழர் சா. பேகன்(குடந்தை நகரச் செயலாளர் த.தே.பொ.க.) வரவேற்புரையாற்றினார். வழக்குரைஞர் பூ.அர. குப்புசாமி (தலைவர், காவிரி மீட்பு குழு) பேராசிரியர் சுப. வீரபாண்டியன் (தலைவர்,தமிழ் தமிழர் இயக்கம்) தோழர் நா.வைகறை( பொதுச் செயலாளர் த.இ.மு) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திரு. பா. அதியமான் நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

## கர்நாடக அரசுக்கு ஆதரவாக செயல்படும் துரோகி ரெங்கநாதனே பேசாதே

# த.தே.பொ.க.விவசாயிகள் மறியல்

நாகை, திருவாரூர், திருத்துறைப்பூண்டி போன்ற கடை மடைப்பகுதிகளில் விவசாயிகள் குறுவை, சம்பா பயிர்களுக்கு தண்ணீர் வேண்டி போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்நிலையில் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க செயலாளர் மன்னார்குடி ரெங்கநாதன் அறிக்கை ஒன்று வெளியிட்டார் இவ்வறிக்கையில், "தென் மேற்கு பருவமழை ஆண்டுதோறும் 300 மில்லி பெய்யும். ஆனால் இந்த ஆண்டு 110 மில்லி மழைதான் பெய்துள்ளது. இதனால் காவிரி டெல்டாவில் நிலத்தடி நீரின் அளவு குறைந்துள்ளது. சீர்காழி, பூம்புகார், பட்டுக்கோட்டை, நாகை , திருவாரூர், திருத்துறைப்பூண்டி பகுதிகளில் 40 ஆயிரம் ஏக்கர் வரை பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரை காப்பாற்ற **மேல் பகுதி விவசாயிகள் உதவ வேண்டும்.** தற்போது நாற்று விடப்பட்டுள்ள சம்பாவிற்கு அதிக அளவு தண்ணீர் தேவை. **கர்நாடகம் தண்ணீர் தந்தால் கூட போதாது. மழையும் பெய்ய வேண்டும்"** என்று கூறினார். இது காவிரி உரிமையைக் கைக்ழுவுகிற அறிக்கை மட்டுமின்றி, காவிரிப் பாசன விவசாயிகளுக்கிடையே மோதலை உருவாக்குகிற படுபாதகமான முயற்சியுமாகும்.

இதற்கிடையில் தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகள் சங்கங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் செப்டம்பர் 22 காலை 10 மணிக்கு தஞ்சை பெரண்ட் அரங்கில் நடைபெற்றது. (இந்தக் கூட்டமே கூட காவிரிப் பிரச்சினையைத் திசை திருப்ப திரை மறைவிலிருந்து கருணாநிதியால் ஏற்பாடு செய்யப்பட்டதோ என்ற ஐயம் எழுந்துள்ளது)

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் சீனிவாசன் சி.பி.எம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீரையன் சி.பி.அய் விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் துரைமாணிக்கம், முன்னாள் இ.காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சிங்கார வடிவேல் தி.மு.க. விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த பொன். கலியமூர்த்தி மற்றும் வருவாய் துறை, பொதுப்பணித்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மன்னார்குடி ரெங்கநாதன் பேச வந்தபோது த.தே.பொ.க. விவசாயிகள் தோழர் த.கா. பரமசிவம் தலைமையில் திடீரென்று மேடை ஏறி கர்நாடக அரசுக்கு ஆதரவாக அறிக்கை வெளியிடும் ரெங்கநாதனே பேசாதே. விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் விதத்தில் அறிக்கை வெளியிட்டு விட்டு எங்களுக்கு ஆலோசனை சொல்வதா? பேசாதே நிறுத்து என்று முழக்கமிட்டனர்.

ரெங்கநாதனின் துரோக அறிக்கையினை நகலெடுத்து கூட்டத்திற்கு வந்தவர்களுக்கு கொடுத்தனர். அதைப்படித்த மற்ற விவசாயிகள் சங்கத்தினரும் கொதித்தனர். அதன்பிறகு ரெங்கநாதன் கூட்டத்தில் பேசவில்லை.

## முனைவர் இர. ந. வீரப்பனார் புகழ் ஓங்குக!

மலேசியத் தமிழ் அறிஞரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நிறுவனத் தலைவருமான முனைவர் இர. ந. வீரப்பன் அவர்கள் (70). 3.9.99 அன்று புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் காலமான செய்தி உலகத்தமிழர்கள் உள்ளத்தில் சம்மட்டி அடியாய் விழுந்தது.

தமிழாசிரியரான இவர் ஓய்வறியா உழைப்பாளி. உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழர்களை ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை உருவாக்கி நடத்தி வந்தார். 43 நாடுகளுக்குப் பயணம் செய்துள்ள இவர் இயக்கத்தின் 7 மாநாடுகளை முறையே சென்னை, மொரிசியஸ், சேலம், கோலாம்பூர், சிட்னி(ஆஸ்திரேலியா), தஞ்சை, டொரண்டோ(கனடா) சென்னை (1999 ஆகஸ்ட் 27-29) ஆகிய இடங்களில் நடத்தினார்.

உலகத் தமிழர் வாழ்வு மற்றும் வரலாற்றினை மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

புதுவைக்குச் சென்ற இடத்தில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு காலமானார். உலகத்தமிழர்களை ஒன்றிணைக்க வேண்டிய தருணத்தில் அவர் இறப்பு, பேரிழப்பு.

முனைவர் இர.ந. வீரப்பனார் மறைவுக்குத் த.தே.பொ.க. தன் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அவர் புகழ் ஓங்குக.

-த.தே.பொ.க.

## மணமக்களுக்கு வாழ்த்துக்கள்

ஒசூர் அசோக் லேலண்டில் பணியாற்றும் தோழர் **கோ. மாரிமுத்து** அவர்களுக்கும் **செல்வி அபிராமி** அவர்களுக்கும் 16.9.99 அன்று திருச்சி நாவல்வட்டு பர்மா குடியிருப்பு சமூகக் கூட்டத்தில் தோழர் பெ.மணியரசன் (பொதுச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. இது ஒரு சாதி மறுப்புத் திருமணம் என்பது பாராட்டத்தக்கது. தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ.500/- அன்பளிப்பு வழங்கினர்.

மணமக்களுக்கு வாழ்த்துக்கள்.

▼▼▼



படிப்பகம்

www.padippakam.com

# ஊர்-உலகம்

## மக்கள் சீனப் பொன்விழா



செஞ்சீனம் உதயம்.... 1949 அக்டோபர் 1 ஆம் நாள் மக்கள் சீன அரசு அமைக்கப்பட்டதை அறிவிக்கிறார் மாவோ.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் மா.சேதுங் தலைமையில் 1949 - அக்டோபர் 1-ஆம் நாள் சீன விடுதலைப் புரட்சி வெற்றி பெற்றது. கிராமப்புறங்கள் நிறைந்த - விவசாய நாடான சீனாவில் நடந்த புதிய ஜனநாயகப் புரட்சி உலக வரலாற்றில் புதிய முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. சீன விடுதலையின் பொன்விழா தலைநகர் பெய்ஜிங்கில் 1999 அக்டோபர் முதல் நாள் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

50 ஆண்டுகளாக சீனா கடந்து வந்த பாதையை சீன மக்கள் மட்டுமின்றி, உலகம் முழுதும் உள்ள முற்போக்கு சிந்தனையாளர்கள் பரிசீலித்து வருகிறார்கள். தோல்விகரமான சூழ்நிலையை "நீண்ட பயணம்" நடத்தி வெற்றியாக மாற்றிய மாவோவின் மேதைமையை நினைத்தால் வியக்காதார் இருக்க முடியாது. நீண்ட பயணத்தின் போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் சீன மக்களும் செய்த தியாகம் அளப்பரியது.

விடுதலைக்குப் பிறகு மாபெரும் பாய்ச்சல் (**Great Leap Forward**), "கலாச்சாரப் புரட்சி" போன்ற கட்டங்களில் சீனக் கட்சியும், மக்களும் பலசாதனைகளை நிகழ்த்தினர்; செறிவான படிப்பினைகளைப் பெற்றனர்.

டெங்சியோ பிங் தலைமைக்கு வந்ததற்குப் பிறகு அவரும் அவரை அடியொற்றி ஜியாங்ஜெமினும் வரம்புக்குட்பட்டு வெளிநாட்டு மூலதனத்தை அனுமதிப்பது என்ற பொருளாதாரக் கொள்கைகளைக் கடைபிடிக்கின்றனர். "சந்தை சோஷலிசம்" என்று இதற்குப் பெயர் சூட்டினார் டெங். இது புதிய உலகச் சூழலுக்கு ஏற்ப சீனா தன்னை நிலை நிறுத்திக் கொள்ள உதவியது என்றாலும் புதிய சவால்களும் எழுந்துள்ளன.

வளர்ந்து வரும் வேலையின்மைப் பிரச்சினை, தலைதூக்கும் நுகர்வுப் பண்பாடு, நீடிக்கும் ஒரு கட்சி ஆட்சிமுறை முதலியவை சீனா எதிர் கொண்டிருக்கும் சிக்கல்களில் சில.

இவற்றை வெற்றிக்ரமாக எதிர்கொண்டு முன்னேறும் ஆற்றல் சீனமக்களுக்கு உண்டு.

மக்கள் சீனத்திற்கு நமது வாழ்த்துகள். .



படிப்பகம்

www.padippakam.com

# ஊர்-உலகம்

## ஜப்பான் அணு உலையில் விபத்து

ஜப்பான் நாட்டில் டொக்காய் முரா என்ற இடத்தில் இருந்த அணு உலையில் செப்டம்பர் 30 அன்று கதரியக்கக் கசிவு ஏற்பட்டு மூன்று தொழிலாளிகள் பாதிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அந்த அணு உலையின் அருகில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். கொஞ்சம் தொலைவிலிருந்தவர்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

நடந்துள்ள சம்பவத்தை 'நெருக்கடி நிலை நிகழ்வு' என்று அணு விஞ்ஞானிகள் விளக்குகின்றன. இந்நிகழ்வின் போது, வழக்கமான கதரியக்க அளவை விட 4000 மடங்கு கதரியக்கம் வெளிப்படுமாம்.

பாதிக்கப்பட்ட மூன்று தொழிலாளிகள் நிலை என்னவென்று தெரியவில்லை. விபத்து பற்றி முழு விவரத்தை வெளியிட்டால் அணு உலை நிறுவனம் கமுக்கமாக வைத்துள்ளது.

அணு உலைகள் ஆபத்து நிறைந்தவை என்பதற்கு இவ்விபத்து மேலும் ஒரு சான்று.

## உலகின் பழமையான புல்லாங்குழல் கண்டெடுக்கப்பட்டது

சீன மண்ணில் புதையுண்டு கிடந்த மிகப் பழமையான ஆறு புல்லாங்குழல்கள் தொல் பொருள் ஆய்வாளர்களால் அண்மையில் கண்டெடுக்கப்பட்டன. இவை 9000 ஆண்டு பழமை வாய்ந்தவை என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இவை செங்கால் நாரையின் இறக்கை எலும்புகளில் துளையிட்டு செய்யப்பட்டுள்ளன. இப்புல்லாங்குழல்களில் ஏழு துளைகள் உள்ளன. ஏழு சுவரங்களுக்கு ஒத்ததாக இவை இருக்கின்றன. ஒவ்வொரு துளையிலும் ஒவ்வொரு சுரம் ஒலிக்கிறது.

இவை நமது 'சரிகமபதநி' யை ஒத்து உள்ளதாம்.

- திரட்டியவர் : பாரதி

---

நூல் புதிது

### தமிழகத்தில் மொழிப்போர் கி.பி.1800..

**- கவிஞர் செவ்வியன்**

கவிஞர் செவ்வியன் இடதுசாரி எழுத்தாளர். திருவள்ளுவர் மக்கள் நற்பணி மன்றத்தின் தமிழகச் செயலாளர்.

தோழர் ப. ஜீவனாந்தம் அவர்களுக்குக் காணிக்கையாக்கப்பட்டுள்ள இந்நூலுக்குத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் வழக்குரைஞர் ச. செந்தில்நாதன் அணிந்துரை எழுதியுள்ளார். ஓவியர் புகழேந்தியின் ஓவியம் அட்டையில் போர்க் கோலம் பூண்டுள்ளது.

மொழி குறித்து மரபு வழிப்பட்ட இடதுசாரி தலைமையினர் கொண்டிருக்கும் கருத்து நிலைக்கு மாற்றாக, முற்போக்கான பார்வையை கவிஞர் செவ்வியன் கொண்டிருக்கிறார். மொழியானது கருத்துப் பரிமாற்றக் கருவி என்பது பழைய இடது சாரித் தலைமையினரின் கருத்து நிலை. நூலாசிரியரோ, மொழியே முகவரி என்ற சரியான நிலைபாட்டை முன்னுரையில் அறிவிக்கிறார்.

1920 களில் தொடங்கி 1999 வரையில் நடந்த தமிழ் மொழிக்காப்பு நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்கள் முதலியவற்றை இந்நூல் பதிவு செய்துள்ளது.

தமிழ்ச்சான்றோர் பேரவை முன்னெடுத்த 100 தமிழ் உணர்வாளர்களின் சாகும் வரையிலான பட்டினிப்போர் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்பட்டினிப் போரில் கலந்து கொண்ட 102 பேர் முகவரிகள், காத்திருப்போர் பட்டியல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. நூலாசிரியர் பெயரும் காத்திருப்போர் பட்டியலில் இருப்பது கவனிக்கத்தக்கது.

இந்நூல் வெளியீட்டுவிழா திருவள்ளுவர் மக்கள் நற்பணி மன்றத்தின் சார்பாக 19.9.99 அன்று சென்னை திரைப்பட இசையமைப்பாளர் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. மன்றத் தலைவரும் திரைப்பட இயக்குநரும் ஆன திரு. வெ. சேகர் தலைமை ஏற்றார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் நூலை வெளியிட தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் திரு.நா. அருணாசலம் முதல்படியைப் பெற்றுக் கொண்டார். திருவாளர்கள் ச. செந்தில்நாதன், சுபவீரபாண்டின், வீ.அரசு, பெ. மணியரசன் உள்ளிட்டோர் நூல் குறித்துப் பேசினர்.

நூலாசிரியர் கவிஞர் செவ்வியன் இறுதியில் நன்றியுரை கூறினார்.

பக்கங்கள் 182 விலை ரூ.50.00

கிடைக்குமிடம்:

**கோதை பதிப்பகம்**
311-5 ஆவது தெற்குக் குறுக்குத் தெரு,
கபாலீசுவரர் நகர், நீலாங்கரை, சென்னை- 41.



படிப்பகம்

www.padippakam.com

# செனரல் டயர்களும் சாலியன் வாலாபாக்குகளும்...

- பி.சீ.நல்லரசன்
(சிறையாளர், நடுவண்சிறை, கடலூர்)

இங்கே
செனரல் டயர்கள்
செத்துப் போய்விடவில்லை,
சிதிலமடைந்த
சிலைகளைப் போல்
மிச்சம் மீதியாய்
நிறைய்ய மீறல்களோடு
இன்னும் மீந்து போய்
கிடக்கின்றார்கள்

23.7.99 இல்
நெல்லை தாமிரபரணிக்கரையில்
அமைதி ஊர்வலத்தின்
அகிம்சையை உடைத்த
காக்கிகளின்
வெறித்தனப் பாய்ச்சலுக்கு
விலகியோடி
தாமிரபரணியாற்றில்
தத்தளித்து செத்துப்போன
கோர சம்பவம்
எத்தனை காக்கிகளின்
இதயத்திற்குள்
ஈரம் சுரக்க வைத்திருக்கும்...?

இரும்புகளுக்குள்
ஈரம் சுரக்குமா...?
வரட்டு பொட்டலில்
பசுமை பூக்குமா?
கோர தாக்குதலின்
கொடுமை தாங்காது
ஒரு வயது மழலையினை
கரையிலே போட்டுவிட்டு
தடியடிக்கு தப்பி
ஆற்றிலே குதித்து
மரித்து போனவளுக்கு
நிச்சயம் தெரிந்திருக்காது
காக்கிகள் தன் குழந்தையையும்
ஆற்றுக்குள்
வீசி எறிந்தி விட்டார்களென்று,

அரசு கணக்கு சொன்னது
பதினெட்டு உயிர்கள்
உண்மையில் அங்கே
உதிர்ந்து போனது
அரை நூறு உயிர்கள்

வெண்மணி முதல்
நெல்லை வரையில்
தொடர்கின்ற
சாலியன் வாலா பாக்குகள்
இனியும்
தொடருமெனில்...

இங்கே
மீண்டுமொரு
சுதந்திர போராட்டமும்
நிரந்தரமாகலாம்
நேதாசிகளோடும்...
பகத்சிங்கு களோடும்...

www.padippakam.com



# போர் செய்வோம் யாம்

- பாவலர் இளஞ்சித்திரன்

தன்னுரிமை, தமிழுரிமை மீட்கத் தான்போர்!
தமிழ்த்தேசப் பொதுவுடைமை ஆக்கத் தான்போர்!
முன்னுரிமை யாம் கொடுத்தோம்! முன்னெ டுத்தோம்!
முதற்போரே விடுதலைப்போர்! யாம் தொ டுத்தோம்!
அன்னையரும் தந்தையரும் ஆடிப் பாடி
அகமகிழ்ந்த திந்தமண்ணே! பாட்டன், பூட்டன்
நன்றெடுத்தெம் கைகொடுத்த திந்த மண்ணே!
நமதுதமிழ் மண்ணுரிமை மீட்போம் யாமே!

மானமெங்கள் புகழுடம்பு! தமிழோ எங்கள்
வாழ்க்கைக்கே உயிர்மூச்சு! இயக்கம் ஆகும்!
ஆன எங்கட் குண்ணும்நீர், உணவெல் லாமும்
அன்னைதந்த செந்தமிழே! தின்னும் வாய்க்கே
ஆன நல்ல வெற்றிலையும் தமிழே ஆகும்!
அஃதின்றி எமக்கில்லை உலக வாழ்க்கை!
போனதென்ன? எதுவெனினும் மீட்கத் தான்போர்!
புரட்சிக்கு மக்களினை அழைத்தோம் நாமே!

அறிவுப்போர் எங்கள்போர்! மக்கட் கெல்லாம்
அதைக்கற்பிக் குமொருபோர்! கையெ டுத்தோம்!
சிறுமைப்போர் எமதில்லை! தமிழி னத்தின்
செழுமைக்கோர் புனிதப்போர்! தமிழர் தம்போர்!
வெறுமைப்போர் இல்லை! இது வெற்றிக் கோர்போர்!
விடுதலையைக் கொண்டுதரும்! விலங்கு டைக்கும் !
தறுகண்போர்! தமிழாள, தமிழர் ஆளும்
தமிழ்த் தேசம் நம்தேசம் அதைப்ப டைப்போம்!

உண்மைகளை எடுத்தெடுத்துச் சொல்லும் எம்போர்!
உரிமையெனில் இன்னதென்று காட்டும் எம்போர்!
கண்களிலே, குருதியிலே கலந்த எங்கள்
கடமைகளை மக்களிடை விளக்கும் அப்போர்!
மண்மதிக்கும் மானத்தைப் போற்றும் பற்றை
வளர்த்தெடுக்கும்; இனஉணர்ச்சி ஊட்டும் எம்போர்!
பண்பட எம் கொள்கைகளைப் பரப்ப எம்
படைவீட்டின் போர்க்கொள்கை! போர் செய் வோம்யாம்!